www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1-28 பிப்ரவரி '90
5-6-7
விலை ரூ.2

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளர் வர்க்கத் தோழர் சி.எஸ்.நாயர் படுகொலை!



தோழர் சி.எஸ்.நாயர்; ''காண்ட்ராக்ட் லேகு உத்யோக் கம்கார் சங்கம்'' என்ற புரட்சிகர தொழிற்சங்கத்தின் பம்பாய் - தானே மாவட்ட செயலர். கோத்ராஜ் நிறுவனத்தின் துணைநிறுவனமான தானே, லாக்கிம் நிறுவனத்தின் தொழிலாளி. நக்சல்பாரி புரட்சி அரசியலால் ஈர்க்கப்பட்டு '85ம் ஆண்டு அதன் மக்கள் திரள் அமைப்புகளில் தன்னை இணைத்துக் கொண்டவர். அதுமுதல், கடுமையான சூழ்நிலையின்கீழ் காண்ட்ராக்ட் தொழிலில் உதிரியாகச் சிதறிக் கிடந்த தொழிலாளர்களை அமைப்பாக்கியவர். காண்ட்ராக்ட் லேகு உத்யேக் கம்கார் சங்கம் என்ற புரட்சிகர அமைப்பின்கீழ் அவர்களை ஒன்று திரட்டி, லாபவெறி கொண்ட முதலாளிகளை கதிகலங்கச் செய்தவர். குறிப்பாக, தான் பணிபுரிந்த லாக்கிம் நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு சிம்மசொப்பனமாக விளங்கியவர். தொழிலாளி வர்க்க விடுதலைக்கு தம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்ட இந்த படைவீரனை லாக்கிம் நிர்வாகம் சீரழிந்த சக தொழிலாளர்கள் சிலரை ஏவி டிசம்பர் 14ந் தேதி ஆலைக்குள்ளேயே படுகொலை செய்துவிட்டது.

தியாகத் தோழர் சி.எஸ்.நாயர் ஒரு தொழிற்சங்கத் தலைவராக மட்டும் சுகமாக வாழ்ந்து மடியவில்லை. கடைசிவரையில் அவர் ஒரு கம்யூனிஸ்டாக வாழ்ந்தார்.

கேரளாவில் பிறந்த தோழர் நாயர், 70ம் ஆண்டுகளில் 'மார்க்சிஸ்ட்' கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். '74ம் ஆண்டில், பம்பாய் - தானா லாக்கிம் நிறுவனத்தில் தொழிலாளியாக சேர்ந்தார். தனது பாட்டாளி வர்க்க போர்க்குணம் சமரசமற்ற போராட்டம் - இவற்றால் மிகக் குறுகிய காலத்தில் லாக்கிம் தொழிற்சங்கத்தை முன்னெடுத்துச் செல்லும் தலைமை பொறுப்பு வகித்தார். இதன் நடுவில், 'மார்க்சிஸ்ட்' கட்சியின் திரிபுவாதத் தலைமைக்கு எதிராக அக்கட்சியிலேயே சகதோழர்களுடன் ஒன்றிணைந்து போராடினார். அதனால் அக்கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளில், உறுதிமிக்க போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற தோழர் நாயர் '79ஆம் ஆண்டிலேயே லாக்கிம் நிர்வாகத்தால் குறி வைக்கப்பட்டார். நிர்வாகத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட குண்டர்கள், வேலைக்குச் செல்லும் வழியில் தோழர் நாயரைத் தாக்கி அவரது வலதுகாலை வெட்டி எறிந்தனர். காலை இழந்து வயிறு கிழிந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். செய்தியறிந்த சக தொழிலாளர்கள், ஒன்று திரண்டு காரணமான கருங்காலிகளையும் அதிகாரிகளையும் ஆலைக்குள்ளேயே இழுத்துப் போட்டு அடித்தனர். தொழிற்சங்கத்தின் செயல்பாடுகளை விட்டு விலகும்படி நிர்வாகம் தோழர் நாயரை பல வழிகளிலும் மிரட்டியது. தோழர் நாயர் முன்னிலும் வேகமாக நெஞ்சுறுதியோடு தனது பணிகளைத் தொடர்ந்தார். செயற்கை கால் பொருத்திக் கொண்டு கடைசிவரையில் அவர் தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் முன்னணிப் படை வீரராக சமரசமின்றி போராடினார்.

புரட்சிகர தொழிற்சங்க இயக்கம் தனது படையணியில் ஒரு பொறுப்பு வாய்ந்த செயல்வீரனை இழந்துவிட்டது. மார்க்சிய - லெனினிய அமைப்பு தனது படையணியில் ஒரு நெஞ்சுரமிக்க போராளியை இழந்துவிட்டது. அந்த போராட்ட வீரனின் பாதையில் நாம் இறுதிவரை உறுதியாகப் போராடுவோம்!

**தோழர் சி.எஸ்.நாயருக்கு எமது வீர வணக்கம்!**

தகவல்:
**ஆவாஹான் நாட்டிய மாஞ்ச், பம்பாய்.**



# போலீசு: சட்டபூர்வ கிரிமினல் கும்பல்

52 பக்கங்கள் கொண்ட
படக்கட்டுரை
புதிய ஜனநாயகம் வெளியீடு!

விலை ரூ.5
தபால் செலவு ரூ.1.50

இப்படக்கட்டுரை எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கும் அரசியல் போதமளிப்பதற்கான ஒரு புதிய முயற்சி!

போலீசு மக்களின் நண்பனா? இல்லை! போலீசு - சட்டபூர்வ சமூக விரோத கும்பல்; போலீசு - சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ரௌடிகள் கூட்டம் என்பதை ரத்தம் தோய்ந்த புகைப்படங்களுடன் நிரூபிக்கும் நூல்.

வாய்ப்புடைய தோழர்கள், முடிந்த அளவு பிரதிகளை வாங்கி ஏழை உழைக்கும் மக்களுக்கு இலவசமாக விநியோகிக்கும்படி, படித்துக் காட்டும்படி உரிமையுடன் கோருகிறோம்.

தோழமையுடன்,
ஆசிரியர்குழு, புதிய ஜனநாயகம்.


'புதிய ஜனநாயகம்' பற்றிய அறிக்கை
4 வது பாரம் (8-ம் பிரிவுப்படி)

1. வெளியிடும் இடம் — சென்னை
2. வெளியிடும் காலம் — மாதம் இருமுறை
3. அச்சிடுபவர் — எம். கே. சாமி
இந்தியரா? — ஆம்
முகவரி — பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை(மேற்கு), சூளைமேடு, சென்னை-600 094.
4. வெளியிடுபவர் — எஸ். மதியழகன், 21, பாலாஜி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15.
5. ஆசிரியர் — எஸ். மதியழகன்
இந்தியரா? — ஆம்
முகவரி — 21, பாலாஜி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
6. உரிமையாளர் — எஸ். மதியழகன், 21, பாலாஜி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15.

எஸ். மதியழகனாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தெரிந்தவரை உண்மையே என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

—ஒப்பம் எஸ். மதியழகன் (வெளியிடுவோர்)



படியுங்கள்!

புதிய கலாச்சாரம்

பிப்-'90 இதழில்...

★ மக்களைக் கலாச்சார அடிமைகளாக்கும் திரைப்படங்கள் — சிறப்புக் கட்டுரை

★ திப்பு சுல்தான் படத்திற்குத் தடை ஏன்?

★ நகைச்சுவைத் துணுக்குள்: சிரிப்பதற்கு முன் சிந்தியுங்கள்!

★ சீரழிகிறது இன்றைய தலைமுறை — அட்டைப்படக் கட்டுரை


அன்பார்ந்த தோழர்களே,

தவிர்க்க இயலாத காரணங்களால் 1-15 பிப்ரவரி இதழ் வெளிவருவது தாமதப்பட்டதால், 16-28 பிப்ரவரி இதழையும் சேர்த்து ஒரே இதழாக இந்த இதழை வெளியிட்டுள்ளோம்.

— ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

**6-7**

1-28 பிப்ரவரி'90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா:US$11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# அரசியல் சூதாட்டத்துக்காகப் பலியிடும் தெலுங்குகங்கை - காவிரிநீர்பிரச்சினைகள்

**கா**விரி நீரின்றி தஞ்சை விவசாயிகளின் கும்பி காய்கிறது. குடிக்க நீரின்றித் தவிக்கும் சென்னை நகர மக்கள் தெலுங்கு கங்கையில் கிருஷ்ணா நீர் வருமென்று எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து போகிறார்கள். காவிரி இன்னுமொரு பாலாறு போன்ற நிரந்தரமாக வரண்டு போய்விடுமோ, தெலுங்கு கங்கை இன்னுமொரு வீராணம் திட்டம் போன்று படுத்து விடுமோ என்று தமிழக மக்களிடம் பயம் உருவாகிவிட்டது. இதற்குக் காரணம் இந்தப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் ஓட்டுக்கட்சிகளின் அரசியல் சூதாட்டத்தில் ஓட்டுப் பொறுக்குவதற்கான துருப்புச் சீட்டுகளாக இவற்றை அவர்கள் மாற்றிவிட்டதுதான்!

அவசரநிலை ஆட்சியின் பரிசாக 'சென்னை மக்களுக்கு கிருஷ்ணா நீர்'' திட்டத்தை 1976-லேயே இந்திரா அறிவித்தார். ஏழாண்டுகளுக்குப் பிறகு ஆந்திர முதல்வர் என்.டி.ராமராவுக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையே ஒப்பந்தமாகியஅத்திட்டம் பல காரணங்களால் நகர மறுத்தது. ஆந்திராவில் என்.டி.ஆர். ஆட்சியை மத்திய அரசு கவிழ்த்து இரண்டுக்கும் 'பகைமை' உருவானது. எனவே சுற்றுச்சூழல், வனத்துறை ஆகிய மத்திய அரசு அனுமதிகள் தராமல் இழுத்தடித்து தெலுங்கு கங்கைத் திட்டத்தை முடக்கிவைத்தது. கால்வாய் வரும் வழியில் உள்ள ராயலசீமைக்கு கிருஷ்ணா நீரில் அதிகப் பாசனவசதி கோரிப் போராடும்படி தனது எம்.எல்.ஏக்களை இந்திரா காங்கிரசு தூண்டியது. துவக்கவிழாவுக்கு வந்து சென்னை மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய கர்நாடகா, மகாராஷ்டிரா முதல்வர்களே கிருஷ்ணா நீரில் அதிகப் பங்கீடு கோரி விவகாரத்தைக் கிளப்பினர். இந்திரா காங்கிரசுடன் எம்.ஜி.ஆர். கூட்டும் வலுப்படவே என்.டி.ஆரும் தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டவே இல்லை. அதற்குத் தரப்பட்ட - ஒதுக்கப்பட்ட நிதியை வேறு துறைகளுக்குத் திருப்பிவிட்டார்.

கருணாநிதி இப்போது மீண்டும் முதல்வரானார். தி.மு.க.வின் தேசிய முன்னணி தலைவரான என்.டி.ஆருக்கு மேலும் பலகோடி ரூபாய் தாரைவார்த்தார். மீண்டும் தெலுங்கு கங்கை ஆமை வேகத்தில் நடக்கத் துவங்கியது. அதற்குள் தி.மு.க.வுக்கு எதிரணியில் உள்ள காங்கிரசு மீண்டும் ஆந்திர ஆட்சியைப் பிடித்துக் கொண்டது. இப்போது ராயலசீமைக்கு மேலும் அதிகப் பாசனவசதி இல்லை என்றால் திட்டத்தைத் தடுப்போம் என்று என்.டி.ஆரின் தெலுங்குதேசம் கட்சி கிளம்பிவிட்டது. ஆந்திராவின் புது முதல்வர் சென்னாரெட்டி கிருஷ்ணா ஆற்றில் உபரிநீரே கிடையாது என்று புதுக்கரடி கிளப்புகிறார். கிருஷ்ணா நீரில் ஏராளமான அளவு உபரிநீர் வருவதன் அடிப்படையில்தான் தெலுங்கு கங்கைத் திட்டம் ஒப்பந்தமாகியுள்ளது. ராயலசீமைப் பகுதிக்கு மேலும் 12 பாசனத் திட்டங்களுக்கு அனுமதி பெறுவதற்காகவும், மகாராஷ்டிரா, கர்நாடகா அரசுகளை அதற்கு நம்ப வைப்பதற்காகவும் சென்னாரெட்டி மேற்கொண்டுள்ள இந்தத் தந்திரத்தினால் சென்னைக்குக் குடிநீர் தரும் தெலுங்கு கங்கைத் திட்டம் மீண்டும் கிடப்பில் போடப்படுகிறது. ஆறு ஆண்டுகளுக்குள் அதாவது 1989ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப் போவதாகச் சொன்ன திட்டம், இன்னும் பல பத்தாண்டுகளும், பல ஆயிரம் கோடி ரூபாய்களும் செலவானாலும் நிறைவேறுமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.

1924ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாகாண அரசுக்கும் மைசூர் சமஸ்தானத்துக்கும் இடையே காவிரி நீர் பங்கீடு பற்றி 50 ஆண்டுகால ஒப்பந்தம் கையெழுத்தானது. அதைப் புதுப்பிப்பதற்கான தமிழக அரசின் எல்லா முயற்சிகளையும் கர்நாடகா அரசு முறியடித்து வருகிறது. அது தலைமடை பகுதியில் இருப்பதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு கபிணி, ஹேமாவதி போன்ற புதுப்புது திட்டங்களை முடித்துப் பாசனவசதி - தேவைகளை ஒருதலைப் பட்சமாகப் பெருக்கிக் கொண்டுவிட்டது 1924 ஒப்பந்தத்தை விடக் கூடுதலான நீர்ப்பங்கீடு கோருகிறது. அந்த ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டது; இனி அதை மதிக்கவேண்டியதில்லை என்று அலட்சியப்படுத்துகிறது. 1968ம் ஆண்டு முதல் பேச்சு வார்த்தைகளை இழுத்தடிக்கிறது; நடுவர் (TRIBUNAL) தீர்ப்புக்கு விடுவதையும் எதிர்த்து வருகிறது. தேசிய ஒருமைப்பாடு பேசும் காங்கிரசு, ஜனதா ஆகிய எந்தக் கட்சி அரசுகளானாலும் பிராந்திய உணர்வைத் தூண்டி ஆதாயம் தேடுவதிலேயே அக்கறையாக உள்ளன. பிரச்சினையைத் தீர்க்க மறுக்கின்றன. மாநில உரிமை பேசி ஓட்டுப்பொறுக்கும் இரண்டு திராவிடக் கட்சிகளின் அரசுகளுமே மத்தியிலும் மாநிலத்திலும் மாறி மாறி ஆட்சிக்கு வரும் காங்கிரசு, ஜனதா கட்சிகளுடன் சமரசம் செய்து கொண்டு தமிழக நலன்களை அடகு வைக்கின்றன.

சர்வதேச நதி நீர்ப்பங்கீடு விதிகளின்படி தலைமடை, கடைமடை ஆகிய இரு பகுதிகளுக்கும் சம உரிமை உண்டு. அதன்படியும் பாசனவசதிகள், நீர் சேமிப்பு ஆகியவற்றையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும். காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளை அபிவிருத்தி செய்து, விரிவாக்குவது; அதன் துணைநதிகளை சீரமைத்து வளப்படுத்துவது; கரைகளை வலுப்படுத்துவது; வெள்ள - உபரி நீரைச் சேமிப்பது; வடிநில நீர்ச்சேதங்களைக் கட்டுப்படுத்துவது, நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது, சுழற்சிமுறையில் அதிக நீர்த் தேவையற்ற பயிர்களை பயிரிடுவது - ஆகிய முறைகளை இரண்டு மாநிலங்களுமே பின்பற்ற வேண்டும். 1924 ஒப்பந்த அடிப்படையில் தமிழகத்துக்கு காவிரி நீரில் பங்கீடு தரவேண்டும்; கர்நாடகாவின் புதிய பாசனத்திட்டங்களுக்கும் நீர்பங்கீடு செய்வதை ஏற்கும் அதேசமயம் ஒருதலைப்பட்சமாக அத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டவை என்பதால் காவிரி வடிகால் பகுதி அபிவிருத்திக்கான செலவை கர்நாடகா மாநில அரசும், மத்திய அரசு மானியமும் வழங்க வேண்டும். இப்படி ஒரு தீர்வை அடைவதற்கு ஓட்டுகட்சிகளை நம்பியிராமல் தமிழக மக்கள் ஒன்று திரண்டு போராடவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# காஷ்மீரும் வங்கதேசமும் - ஒரு ஒப்பீடு



காஷ்மீர பனிமலை போர்க்கோலம் பூண்டு எரிமலையாக கிளர்ந்தெழுந்து நிற்கிறது. 'அமைதி' தவழும் அந்தப் பனிப் பள்ளத்தாக்கில் காஷ்மீர மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டப் புயல் சுழன்றடிக்கிறது. அரசு பயங்கரவாத அடக்குமுறை - அச்சுறுத்தல்களையும் மீறி ஆயிரக் கணக்கில் இளைஞர்களும் மக்களும் திரண்டு வீதிகளில் வீரப் போர் புரிகின்றனர். தொடர்ச்சியாக கடையடைப்பு, ஆர்ப்பாட்டங்கள், வெடிகுண்டு வீச்சுகள், போராளிகளின் எதிர்த்தாக்குதல்கள் என்று காஷ்மீர மாநிலமே உள்நாட்டுப் போர் நிலைமையில் உள்ளது.

## அரசு பயங்கரவாதமும் தேசிய வெறியூட்டலும்

காஷ்மீரின் 'கலவர நிலை' கண்டு விழி பிதுங்கி நிற்கும் தேசிய முன்னணி அரசும், உயிர்நாடியை கையில் பிடித்துள்ள அதன் கூட்டாளிகளும் போராட்டத்தை ஒடுக்கப் போலீசையும் ராணுவத்தையும் குவித்து அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு அறிவிக்கப்படாத அவசரநிலை ஆட்சியை நிறுவியுள்ளனர். மாநிலம் தழுவிய ஊரடங்கு உத்திரவு போட்டும், கண்டதும் சுடும்படி ஏவியும் ராணுவத் தாக்குதலைத் தீவிரப்படுத்தி உள்ளனர்.

இதற்காகவே அவசரநிலை பாசிச ஆட்சியின் போது அட்டூழியம் புரிந்த ஜக்மோகனை காஷ்மீரின் புதிய கவர்னராக தேசிய முன்னணி அரசு நியமித்துள்ளது. இவர் இந்திரா - ராஜீவ் கும்பலின் விசுவாசி என்றாலும் சிறந்த அரசு பயங்கரவாத 'இரும்பு மனிதர்' என்பதற்காகவே கவர்னர் பதவியில் அவரை அமர்த்தியுள்ளது. தமது அரசின் மூலமே அடக்குமுறையை ஏவிவிடும் தேசிய முன்னணி அரசின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு, தாம் மேலும் மக்களிடம் தனிமைப்பட்டுப் போகாமலிருக்க, ஜக்மோகனின் நியமனத்தைச் சாக்கிட்டு பதவி விலகியுள்ளார், முதல்வர் பரூக் அப்துல்லா. பரூக் கட்சியின் எம்.எல்.ஏ.க்கள் ராணுவத்தை உடனடியாக விலக்கிக் கொள்ளாவிடில் தாமும் பதவி விலகப் போவதாக எச்சரிக்கின்றனர்.

ஆனால் காஷ்மீர் பிரச்சினைக்கு அரசு பயங்கரவாதத்தையே தீர்வாகக் கொண்டுள்ள தேசிய முன்னணி அரசு, பாகிஸ்தான் ஆதரவு பெற்ற தீவிரவாதிகள் - பிரிவினைவாதிகளால் நாட்டின் ஐக்கியம் - ஆதிபத்திய உரிமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கூறி, காஷ்மீரில் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாமல் செய்தி பத்திரிக்கைகளுக்கு தடைவிதித்து வெளியுலகத் தொடர்பிலிருந்து முற்றாகத் துண்டித்து சுற்றி வளைத்து அடக்கவிடத் துடிக்கிறது.

ஆனால் அடக்குமுறை - அச்சுறுத்தல்களையும் மீறி காஷ்மீர் மக்களின் உரிமைப் போராட்டம் பற்றிப் படர்கிறது. ஊரடங்கு தளர்ததப்படும் சில மணிநேர இடைவெளியில் கூட ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு இந்திய அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இந்திய தேசியக் கொடி பல இடங்களில் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. அரசின் குடியரசு தின நிகழ்ச்சிகள் அரைமணி நேரத்துக்குள் அவசரமாக முடித்துக் கொள்ளுமளவுக்கு கொந்தளிப்பான நிலைமையே நிலவுகிறது. அதேசமயம் காஷ்மீர் விடுதலை முன்னணி, பாகிஸ்தான் மற்றும் பாக். கட்டுப்பாட்டில் உள்ள ஆசாத் காஷ்மீர் ஆகிய மூன்று கொடிகளை ஏற்றி, வெற்றிப் பாடல்களைப் பாடி மக்கள் இந்திய எதிர்ப்பு முழக்கமிடுகின்றனர்.

வழக்கம் போலவே இந்திய ஆட்சியாளர்களும் விதிவிலக்கின்றி அனைத்து ஓட்டுப் பொறுக்கி கட்சிகளும் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரை பிரிவினைவாதம் என்று சாடுவதோடு, பாகிஸ்தான் ஆயுத உதவியும், ஆதரவும் அளித்து தீவிரவாதிகளைத் தூண்டிவிட்டு சீர்குலைவு செய்வதாகக் குற்றம் சாட்டுகின்றன. இந்து வெறி பாரதீய ஜனதா கட்சி, பாகிஸ்தானை எதிர்த்து ஊர்வலம் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்கிறது. பயங்கரவாதத்தை அடக்க வேண்டும்; பாகிஸ்தானுக்கு பகிரங்கமாக எச்சரிக்கை விட வேண்டும் என்று தேசிய முன்னணி அரசை நிர்பந்திக்கிறது.

## காஷ்மீர் இந்தியாவுக்குச் சொந்தமானதா?

பாகிஸ்தான் ஆதரிப்பதாலேயே காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை பிற்போக்கானதாக, பிரிவினைவாதமாக கருதமுடியாது. காஷ்மீர் பிரச்சினைக்கு நீண்ட அடிப்படை இருக்கிறது. 1947 அதிகார மாற்றம் நடந்த உடனேயே இந்தியாவும் பாகிஸ்தானும் போரில் இறங்கி காஷ்மீரைப் பங்கு போட்டுக் கொண்டன. காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத அதேசமயம் இருநாடுகளுமே காஷ்மீர் முழுவதும் தனக்கே சொந்தமென்று உரிமை பாராட்டுகின்றன.

''காஷ்மீரின் ஒரு பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. ஐ.நா. சபையின் மேற்பார்வையில் காஷ்மீரின் எதிர்காலம் குறித்து ஒரு பொதுமக்களின் கருத்து வாக்கெடுப்பு நடத்தப்படும்'' என்று '50களில் இந்திய அரசு அதிகார பூர்வமாக அறிவித்து வந்தது. ''சுதந்திரமான, நியாயமான கருத்து வாக்கெடுப்பு மூலம் காஷ்மீரின் எதிர்கால அந்தஸ்து தீர்மானிக்கப் படும் என்று 1948, 1949, 1957 ஆகிய ஆண்டுகளின் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் தீர்மானத்தை இருநாடுகளுமே ஏற்றுக் கொண்டன.

ஆனால், 1960க்குப் பிறகு இந்திய - சீன எல்லைப் பிரச்சினையைப் போலவே, ''காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி ஆகிவிட்டது; கருத்து வாக்கெடுப்புக்கே இடமில்லை'' என்று இந்தியா தனது நிலையை மாற்றிக் கொண்டது. காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைவதா, இந்தியாவுடன் இணைவதா, தனித்து இருப்பதா என்பதைத் தீர்மானிக்கும் கருத்துக் கணிப்பு தேர்தல் நடத்த வேண்டும் என்று கோரி வந்த சேக் அப்துல்லா கும்பல் பரம்பரை பதவி கிடைத்ததும் இந்திய அரசுடன் சமரசம் செய்து கொண்டு துரோ



படிப்பகம்

www.padippakam.com

கம் இழைத்தது. போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர் பி.ராமமூர்த்தி இதற்காக தரகு வேலை செய்தார்.

பின்னர் இந்துவெறி - தேசிய வெறியூட்டி பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுத்து அதன் பிறகு உருவான சிம்லா ஒப்பந்தம் மற்றும் தாஷ்கண்ட் ஒப்பந்தங்கள் கூட காஷ்மீர் பிரச்சினையைப் பேசித் தீர்க்க வேண்டும் என்றுதான் குறிப்பிடுகிறதே தவிர, காஷ்மீரை இந்தியாவின் மாநிலமாக அங்கீகரிக்கவில்லை. ஆனாலும் இந்திய விஸ்தரிப்புவாதிகள் தேசிய வெறி - இந்து வெறியூட்டி காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரை நீண்ட காலமாகவே ஒடுக்கி வருகின்றனர்.

இப்போது காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கியதும், ''பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் கொரில்லாப் போர்பயிற்சி அளிக்கிறது. நேரடியாக இந்தியாவுடன் காஷ்மீரைப் பறிக்க மோதினால் உதைபட நேரிடும் என்பதால், தீவிரவாதிகளுக்கு ஆயுத உதவியளித்து நாட்டைத் துண்டாட சதி செய்கிறது. பாக். பிரதமர் பெனாசிர் காஷ்மீர் போராட்டத்தை வெளிப்படையாக ஆதரித்து அறிக்கை விடுகிறார். இதை ஒரு போதும் நாம் சகித்துக் கொள்ள முடியாது'' என்று அனைத்து ஓட்டுக்கட்சிகளும், ஆட்சியாளர்களும் ஏகோபித்த முறையில் பாகிஸ்தானை குற்றஞ்சாட்டுகின்றனர்.

### பாசிச இந்திராவின் வங்கதேச சதிகள்

காஷ்மீர் மக்களின் போராட்டத்தை பாகிஸ்தான் ஆதரிப்பதோடு, பயங்கரவாதிகளுக்கு ஆயுத உதவியளிப்பதும் உண்மைதான். ஆனால் அண்டைநாட்டின் உள்விவகாரத்தில் தலையிட்டு சதி செய்வதாக பாகிஸ்தான் மீது குற்றம் சாட்டுவதற்கு இந்தியா அரசுக்கு எந்த அருகதையும் இல்லை. ஏனெனில் இந்திய ஆட்சியாளர்களே பாகிஸ்தானைத் துண்டாடி வங்கதேசத்தை உருவாக்கிய மாபெரும் சதிக் குற்றத்தைச் செய்துள்ளனர். பாகிஸ்தான் எதிர்ப்புப் பிரச்சாரம் தீவிரமாகியுள்ள இன்றைய நிலையில், வங்கதேசப் பிரச்சினையையும் காஷ்மீர் பிரச்சினையையும் ஒப்பிட்டுப் பார்ப்பது



அரசு பயங்கரவாத 'இரும்பு மனிதர்' ஜக்மோகன்.

மிக அவசியமானது.

'60 களின் இறுதியில் பாசிச இந்திரா, காங்கிரசைப் பிளந்து, தனிமைப்பட்டு செல்வாக்கு இழந்திருந்த நேரம் அது. நாடாளுமன்றத்திலேயே சிறுபான்மை அரசாகத் தான் இந்திரா காங்கிரஸ் இருந்தது. தமது செல்வாக்கை உயர்த்திக் கொண்டு, அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள, பாகிஸ்தானைத் துண்டாடி, வங்க தேசத்தை உருவாக்கும் சதியில் இறங்கினார், இந்திரா. அப்போது கிழக்கு பாகிஸ்தானில் இராணுவ வெறியாட்டத்தால் கொதிப்புற்ற மக்களுக்கு முஜிபுர் ரஹ்மான் தலைமையேற்று மேற்கு பாகிஸ்தானிடமிருந்து சுயாட்சி கோரி வந்தார். 1962-63-லேயே இந்திய உளவுப் படை ஐ.பி.யின் தலைவராக இருந்த சங்கரன் நாயர் மூலம் முஜிபுர் ரஹ்மானின் ஆட்களுக்கு ஆயுத உதவி செய்து, உசுப்பிவிட்டது இந்திய அரசு. டாக்கா ஆயுதக்கிடங்கை முஜிபுர் குழுவினர் சூறையாட முயன்று தோற்றனர்.

பின்னர், பாகிஸ்தானில் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்ட நெருக்கடியையும், மக்களது ராணுவ சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டங்களையும் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு மீண்டும் 1968ல் வங்கதேசத்தை உருவாக்கும் சதிகளில் உளவுப்படை ''ரா'' இறங்கியது. மீண்டும் சங்கரன் நாயர் தலைமையில் கொரில்லா குழுக்களும், உளவாளி குழுக்களும் கட்டியமைக்கப்பட்டன. பின்னாளில் முக்திபாகினி என்ற பெயரில் கட்டப்பட்ட முஜிபுரின் ராணுவத் தளபதியாக இருந்த கர்னல் ஒஸ்மானி, மேஜர் சைபுல்லா, ''புலி சித்திக்'' என்றழைக்கப்படும் அப்துல்காதர் சித்திக் ஆகியோருக்கு 'ரா' நேரடியாகப் பயிற்சி அளித்தது. முஜிபுர் ரஹ்மான் கைதானதைத் தொடர்ந்து வங்கதேசத்தில் மக்கள் எழுச்சி உருவானது.

அதைத் தொடர்ந்து முஸ்டாக் அகமது என்பவர் தலைமையில் வங்கதேச இடைக்கால அரசை நிறுவி, அறிக்கைகளை கல்கத்தாவிலுள்ள காங்கிரஸ் அலுவலகத்திலிருந்தே வெளியிட்டனர். முக்திபாகினி போராளிகள் தம் சொந்த முயற்சியால் வங்கதேசத்தின் ஒரு பகுதியை விடுவித்து இடைக்கால அரசை முஜிப் நகரில் அமைத்து செயல்படுவதாக இந்திய அரசும் பத்திரிக்கைகளும் புளுகின. ''ரா''வின் ஏஜெண்டுகளும், ரகசிய கொரில்லாக் குழுக்களும் முஸ்லீம்களைப் போல வேடமணிந்து கிழக்கு பாகிஸ்தானில் ஊடுருவி பாலங்களைத் தகர்ப்பது, சொத்துக்களைச் சூறையாடுவது முதலான சதிகளிலும் பயங்கரவாத நடவடிக்கைகளிலும் இறங்கினர். அதேநேரத்தில் ராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்து, ஆயுதப் போராட்டப் பாதையில் முன்னேறிய மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்களைக் கொன்றொழித்தனர். மக்களது ராணுவ சர்வாதிகார எதிர்ப்புப் பேரலையைப் பயன்படுத்திக் கொண்டு ''ரா''வின் மேற்பார்வையில் நிறுவப்பட்ட முக்திபாகினி, எதிர்ப்பு யுத்தத்தைத் தொடுத்தது. அதே நேரத்தில் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்து குவிந்த அகதிகளைக் காரணம் காட்டி இந்திய ராணுவம் படையெடுத்தது. 12 நாட்களில் வங்கதேசம் உருவாக்கப்பட்டது.

இந்திய அரசின் பலத்தைக் கொண்டு முஜிபுர் ரஹ்மான் வங்கதேசத்தின் அதிபரானதோடு, மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரராக சித்தரிக்கப்பட்டார். இந்தியத் தரகு முதலாளிகளின் தொழிலுக்கும் வர்த்தகத்துக்கும் ஆதிக்கத்துக்கும் புதிய வாய்ப்புக்கள் பெருகியதால், இந்திய ஆளும் வர்க்கங்

வெஞ்சினத்தை நெஞ்சில் தேக்கி இந்திய தேசியக் கொடியை எரிக்கும் காஷ்மீர் மக்கள்.



இந்திய ராணுவம் வீசிய கண்ணீர் புகைக்குண்டு குப்பிகளுடன் காஷ்மீர பெண்.



படிப்பகம்

www.padippakam.com

கள் இந்திராவை உச்சி முகர்ந்து பாராட்டின. விடுதலைக்குப் பாடுபட்ட வீராங்கனையாக சித்தரிக்கப்பட்டு. அவரது செல்வாக்கு பெருகி 'அன்னை' இந்திராவானார். வங்க தேசப் போருக்குப் பிறகு 1971ல் நடந்த இந்தியப் பொதுத் தேர்தல்களில் பாசிச இந்திரா கும்பல் பெரும் வெற்றி பெற்றது. ஆனால் இந்தியாவின் தயவில் ஆட்சிக்கு வந்த முஜிபுர் ரஹ்மான், வங்கதேசப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல், ஒரு கட்சி சர்வாதிகாரத்தைக் கொண்டு வந்து. பின்னர் நடந்த ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பில் கட்டுக் கொல்லப்பட்டார்.

'அன்னை' இந்திராவின் வழியிலேயே, லஞ்சஊழல், அதிகார முறைகேடுகளால் மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போயிருந்த பாசிச ராஜீவ் கும்பலும் ஈழ விடுதலை இயக்கத்தினுள் ஊடுருவி, "ரா"வைக் கொண்டு சீர்குலைத்து, ஈழத்தில் பொம்மை அரசை நிறுவும் சதியில் இறங்கியது.

### பெனாசிர் ஆதரிப்பது ஏன்?

அதுபோலவே, நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தான் பிரதமர் பெனாசிரும், காஷ்மீர் விவகாரத்தில் தலையிடுவதன் மூலம் தனது செல்வாக்கை உயர்த்திக் கொண்டு அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள எத்தனிக்கிறார். முஸ்லீம் அடிப்படைவாதிகளின் ஆதரவு பெற்ற எதிர்க்கட்சியினர் இருமாதங்களுக்கு முன் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மான வாக்கெடுப்பில் நூலிழையில் தான் பெனாசிர் அரசு தப்பியுள்ளது. இப்போதும் கூட, எப்போது வேண்டுமானாலும் ஆட்சி கவிழ்க்கப்படலாம் என்ற அபாயம் நிலவுகிறது. இப்போது காஷ்மீரில் போராட்டம் தீவிரமானதும், பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் இந்திய தேசியக் கொடியையும் இந்தியப் பிரதமரின் கொடும்பாவியையும் எரித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி பெனாசிரை அச்சுறுத்தினறனர். காஷ்மீர் மக்களின் போராட்டத்தை ஆதரிப்பதன் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பு அபாயத்திலிருந்து தப்பிப்பதோடு, தனது செல்வாக்கையும் உயர்த்திக் கொள்ள முடியும் என்பதால் பெனாசிர் அரசு காஷ்மீர் போராளிகளுக்கு ஆதரவும், ஆயுத உதவியும் அளித்து ஊக்குவித்து வருகிறது.

இப்படி, வங்கதேசத்துடன் காஷ்மீர் பிரச்சினையை ஒப்பிடுவது சரியல்ல; முஜிபுர் ரஹ்மான் பாக். பொதுத்தேர்தலில் ஆகப் பெரும்பான்மையாக வெற்றி பெற்றிருந்தார். இந்தியா ஆதரித்தாலும் இல்லாவிட்டாலும் வங்கதேசம் உருவாகியிருக்கும் என்று சிலர் வாதிடலாம். உண்மைதான்! பாகிஸ்தானைப் போல, காஷ்மீரிலும் கருத்து கணிப்பு தேர்தல் ஜனநாயக பூர்வமாக நடந்திருந்தால் காஷ்மீரும் தனிநாடாக மாறியிருக்கும். பாகிஸ்தானின் ராணுவ சர்வாதிகாரியாகியா கான் கூட தேர்தலை நடத்தினார். ஆனால் ஜனநாயக நாடகமாடும் இந்திய ஆட்சியாளர்கள் காஷ்மீரில் கருத்து கணிப்பு தேர்தலையே நடத்தாமல், நீண்டகாலமாகவே சுயநிர்ணய உரிமையை மறுத்து அடக்கி ஒடுக்கி வருகின்றனர்.



இந்திய அரசு பயங்கரவாதத்துக்கு இரையாகி உயிருக்குப் போராடும் காஷ்மீர சிறுவன்.

### விசுவாசிகளின் ஆட்சி! மோசடித் தேர்தல்கள்!

கருத்து கணிப்பு வாக்கெடுப்பு ஒருபுறமிருக்கட்டும். இந்திய 'ஜனநாயக' ஆட்சிமுறையின் கீழ் காஷ்மீரில் நடைபெறும் தேர்தல்களே மோசடித்தனமானது என்பதை முதலாளித்துவப் பத்திரிக்கைகளே அம்பலப்படுத்துகின்றன. காஷ்மீரில் ஒருபோதும் ஜனநாயக பூர்வமான அமைதியான தேர்தல் நடந்தது கிடையாது. தேர்தல் தில்லுமுல்லு, மோசடி, வன்முறையுமே வழமையாகிப் போய்விட்டது. கடந்த தேர்தலில் உதாம்பூர் தொகுதியில் வாக்குச் சாவடியையே காங்கிரசு குண்டர்கள் துப்பாக்கி முனையில் கைப்பற்றி கள்ள ஓட்டுப் போட்டனர். போலீசார் பயந்து ஓடி ஒளிந்து கொண்டனர். 1983ல் நடந்த தேர்தலில் தோடா தொகுதியில் மோசடி நடந்ததை தேர்தல் கமிஷனே ஒப்புக் கொண்டது. சுருக்கமாகச் சொன்னால் துப்பாக்கி முனையில் மோசடித் தேர்தல்களை நடத்தித்தான் இந்திய ஆட்சியாளர்கள் 'ஜனநாயகத்தை' நிலைநாட்டி உள்ளனர்.

இன்னும் சொல்லப் போனால், காஷ்மீர் மக்களுக்குத் துரோகமிழைத்து பதவிக்கு வந்த சேக் அப்துல்லாகூட காங்கிரசு ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்டவர்தான். ஆளும் கும்பலுக்கு விசுவாசமாக உள்ள வரை அவரும், அவருக்குப் பின் அவரது மகன் பரூக்கும் என பரம்பரை ஆட்சி தொடர்ந்தது. பின்னர் பரூக் எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச் சேர முயன்றதும் அவரது ஆட்சியை பாசிச இந்திரா கும்பல், அப்போது காஷ்மீர் கவர்னராக இருந்த இதே ஜக்மோகனை வைத்து கலைத்துவிட்டு, ஜி.எம்.ஷாவின் ஆட்சியை நிறுவியது. பரூக் அப்துல்லாவை பிரிவினை சக்திகளுக்கு ஆதரவளிக்கும் தேசவிரோதியாக பாசிச இந்திரா கும்பல் சித்தரித்தது. பின்னர் ராஜீவ் ஆட்சியில் அரசியல் விபச்சாரத்தின் மூலம் மீண்டும் பரூக் பதவியைப் பிடித்தார். இப்படி தனது விசுவாச கும்பல்களை ஆட்சியில் அமர்த்தி காஷ்மீர் மக்களின் சாதாரண ஜனநாயக உரிமைகளைக்கூட பறித்து 'ஒருமைப்பாட்டை' காத்து வருகிறது இந்திய பிற்போக்கு அரசு.

இந்திய, பாகிஸ்தான் ஆட்சியாளர்களின் நோக்கமெல்லாம் தேசிய இனங்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஆதரிப்பதல்ல; தமது உள்நாட்டு நெருக்கடிகளைத் திசை திருப்பிவிட்டு அண்டைநாடுகள் சதி செய்வதாக பீதியூட்டி, தேசிய வெறி - மதவெறியைக் கிளறிவிட்டு தமது கேடு கெட்ட ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதுதான் அவர்களின் நோக்கம். அதன்படியே, பாகிஸ்தான் சதி செய்வதாக தேசிய வெறியைத் தூண்டிவிட்டு காஷ்மீர் மக்களின் நியாயமான போராட்டத்தை ஒடுக்கிவருகிறது இந்திய அரசு. அதேசமயம் 'முஸ்லீம்களே இப்படித்தான்; அவர்கள் பாகிஸ்தானின் கைக்கூலிகள்; தேசப்பற்று இல்லாதவர்கள்' என்று மதவெறியைக் கிளறிவிடுகின்றனர், இந்து வெறியர்கள்.

தேசியவெறி - மதவெறியைத் தூண்டி பலாத்காரமான முறையில் தேசிய இனங்களைச் சிறைப்படுத்தி வைத்து தேசிய ஒருமைப்பாட்டை ஒருக்காலும் சாதிக்கவே முடியாது. சுயநிர்ணய உரிமை வழங்கப்படாத வரை காஷ்மீர் மக்களின் போராட்டமும் ஒருக்காலும் ஓய்ந்து விடாது.

■ மனோகரன்

இந்திய ராணுவம் காஷ்மீர் போலீசை சுட்டுக் கொன்றதை எதிர்த்து போலீசாரின் கலகம்.



படிப்பகம்

www.padippakam.com

# பிரபாகரனும் - தமிழ் இனவாதக் குழுக்களும்

'சோ'வின் 'துக்ளக்' இதழில் வரும் 'தனித் தமிழ்நாடு கோஷம் அலட்சியப்படுத்தக் கூடியதல்ல' என்கிற கட்டுரைத் தொடர் குறித்து நகைமுகன் ராமச்சந்திரன் என்பவர் அந்த ஏட்டுக்கு வாசகர் கடிதம் எழுதியுள்ளார். அதில், "தாய்த் தமிழ் மொழியையும், தமிழினத்தையும், அதன் விடுதலை உணர்வையும், வீரத்தையும் உலகறியச் செய்த விடுதலைப் புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரனை, ஈழத் தமிழர்கள் மட்டுமின்றி, இந்தியத் தமிழர்களும் நம்புகின்றனர். அவரது தலைமை தம்மை விடுவிக்கும் என்றும் விடியல் பிறக்கும் என்றும், அடிமைத்தளை அகற்ற உதவுமென்றும் திடமாக நம்புகின்றனர்" என்று அவர் எழுதியுள்ளார். தனித் தமிழ்நாடு - சுயநிர்ணய உரிமை கோரித் தோன்றியுள்ள தமிழ் இனவாதக் குழுக்களில் பலவும் இதே கருத்தைத்தான் கொண்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது உருவாக்கி வளர்க்கப்படும் தனி நபர் மோகம், தனிநபர் வழிபாடு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் அடைந்துள்ள வெற்றியின் காரணமாக தீவிரப்பட்டுள்ளது. அவற்றின் விளைவுகள் - விபரீதங்கள் ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல, இந்தியத் தமிழர்களும் எச்சரிக்கை அடையவேண்டும்; அந்த நஞ்சு பரவுவதை எதிர்த்துப் போராடி முறியடிக்க வேண்டும்.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தோல்வி - நிர்ப்பந்தம் காரணமாக வெளியேறுகிறது. இலங்கை அரசுடன் புலிகள் ஏதோ ஒருவித சமரசத்துக்கு வந்திருக்கிறார்கள். ஈழத் துரோகிகளும் பேரிழப்புகளைத் தவிர்த்துவிட்டு ஓடிவிடுவதென்று முடிவு செய்து விட்டார்கள். இவற்றால் ஈழம் முழுவதையும் புலிகள் தமது இராணுவ அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவது எளிதாகிவிட்டது.

இந்த வெற்றியைச் சாதித்ததில் விடுதலைப் புலிகளுக்கும், அவர்களுக்குத் தலைமையேற்ற பிரபாகரனுக்கும் முக்கிய பங்குண்டு. இந்த வெற்றியை விடுதலைப் புலிகள் கொண்டாடுவதிலும், உரிமை பாராட்டுவதிலும் நியாயமுண்டு. ஆனால் விடுதலைப் புலிகள் மட்டுமே, அவர்களிலும் குறிப்பாக பிரபாகரன் மட்டுமே இதைச் சாதித்து விட்டதாக உரிமை கொண்டாடுவதும், தனிநபர் துதிபாடுவதும் நியாயமாகுமா?

இன ஒடுக்குமுறை - படுகொலைக்கும், ஆக்கிரமிப்புப் படையின் அட்டூழியங்களுக்கும் அஞ்சாது போராடி ஆயிரக்கணக்கில் தொடர்ந்து தியாகம் செய்துவரும் ஈழ மக்கள்; போர்க்களத்திலே துணை நின்ற மற்றபிற ஜனநாயகப் போராளிகள்; இந்திய ஆக்கிரமிப்பு ஆதிக்க தேசிய வெறிக்கும், சந்தர்ப்பவாத துரோகத்துக்கும் அடிபணியாது ஈழவிடுதலைக்கு இந்திய மக்கள் காட்டிய சகோதரத்துவ ஆதரவு; இவற்றையெல்லாம் மதியாது ஒரு இயக்கமும் அதன் தலைவரும் சுயதம்பட்டம் அடித்துக் கொள்வது சரியாகுமா?

இன ஒடுக்கு முறைக்கும் அந்நிய ஆக்கிரமிப்புக்கும் எதிரான போர்களுக்குத் தலைமை ஏற்றார், வெற்றி கண்டார் என்பதற்காக மதிப்பும் மரியாதைக்குரிய தலைவராகவும் பிரபாகரனை ஈழமக்கள் கருதுவார்களேயானால் அது தன்னியல்பாக உருவாக வேண்டும். அப்போதும் அது தனிநபர் வழிபாடாகவும் தனிநபர் பாசிச சர்வாதிகாரமாகவும் இருக்கக் கூடாது என்று எச்சரிக்கையாய் இருப்பது அவரே தலைமை ஏற்றுள்ள இயக்கத்தின் பொறுப்பாகும்.

ஆனால் பிரபாகரன் மீது அப்பட்டமான பயபக்தியும் முகத்துதியும் திட்டமிட்டு வளர்க்கப்படுகிறது. உண்மையான மக்கள் தலைவன் எவனும் இவைகண்டு அருவெறுப்பும் வெட்கமும் கூச்சமுமே கொள்ள முடியும். ஆனால் புலிகளின் தலைவர் பிரபாகரனோ, தனது சொந்த மேற்பார்வையில் தன் மீதேயான தனி நபர் மோகம், தனிநபர் வழிபாட்டை உருவாக்கிப் பரப்புகிறார். அவற்றைக் கண்டு பூரித்துப் போகிறார்.

சமீபத்தில் ஈழத்துக்குப் போய் பிரபாகரனைச் சந்தித்து விட்டுத் திரும்பிய அவரது நெருங்கிய நண்பரும், தி.க. மாநிலச் செயலாளர்களில் ஒருவருமான டி.எஸ்.மணி பின்வருமாறு கூறுகிறார்: "இயக்கத்தில் சேர்ந்து பிரபாகரனைப் பார்க்காமலேயே இறந்துபோன விடுதலைப் புலிகள் உண்டு. 'இனி மேல் இதுபோன்று நிகழவேண்டாம்... படத்திலாவது பார்க்கட்டும்' என்பதற்காக பிரபாகரன் பயிற்சி அளிப்பது வீடியோ எடுத்துப் பல முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றன. அந்த வீடியோ படத்தைப் பிரபாகரன் போட்டுப் பார்த்து 'எடிட் செய்து அனுப்புகிறார்." (ஜூனியர் விகடன். 31.1.90).

ஒரு இயக்கத்தில் சேர்ந்து போரிட்டு மடியும் வீரனின் நெஞ்சிலே இலட்சியப்பற்றும், தேசத்தின் மீதும் மக்களின் மீதும் பாசமும் வளர்க்கப் படவேண்டும்; அவனுடைய தியாக உணர்வும் வீரமும் மதித்துப் போற்றப்பட வேண்டும். அவ்வாறின்றி "ஐயோ, என் தலைவனைப் பார்க்காமலேயே சாகிறோமே" என்கிற விகவாசத்தை வளர்க்கக் கூடாது; அந்த ஏக்கத்துக்குக் தீனிபோடக் கூடாது. அதுவும் அந்தத் தலைவரே இப்படிச் செய்வது வெட்கக்கேடானதில்லையா?

இன்னும் கொஞ்சம் நாட்களிலே, "ஈழ மக்கள் பிரபாகரனின் கால்களிலே விழுந்து கும்பிட்டு ஆசிவாங்குகிறார்கள்; பிரபாகரனின் படத்தை வைத்து பூசை போடுகிறார்கள்" என்ற செய்தி கொண்டு வருவார்களோ! அப்புறம், "தலைவா! தலைவா!" என்று கதறிக் கொண்டு அற்பக் காரணங்களுக்கெல்லாம் பிரபாகரனின் தொண்டர்கள் தீக்குளிப்பதாக செய்திகள் வருமோ?! வரலாம்!

கருணாநிதி, எம்.ஜி.ஆர் போன்ற இந்திய ஓட்டுக்கட்சி பிழைப்புவாதிகளும், ரஜினிகாந்த், கமலகாசன் போன்ற நடிகர்களும் இப்படிச் செய்வதை இங்கே பார்க்கிறோம். ஜெர்மனியின் இட்லரும், இத்தாலியின் முசோலினியும் தமது தனிநபர் மோகம், தனிநபர் வழிபாட்டைப் பரப்புவதற்காகவே பல கோயபல்சுகளைக் கொண்ட பிரச்சாரப் படைகளைக் கட்டிப் பயன்படுத்தியதாகப் படித்திருக்கிறோம். புலிகளின் பிரபாகரன் அவர்களை எல்லாம் எடுத்து விழுங்கி விடுவார்!

"இல்லை. நீங்கள் ரொம்பவும் கொசைப் படுத்துகிறீர்கள், அதுவும் ஒரு வீரனை, விடுதலைப் போராளியை வீரத் தளபதியை!" என்று அவரது ஆதரவாளர்கள் இவற்றை நிராகரித்து விடலாம். ஆனால் பிரபாகரன் அப்படித்தான் செய்கிறார்

ஒரு சினிமா நடிகனைப் போல, ஒரு ஓட்டுக் கட்சித் தலைவனைப் போல, பிரபாகரனின் படங்களைக் கொண்ட சுவரொட்டிகள் - 'காலெண்டர்கள்', 'புளோ-அப்' புகைப்படங்கள், ஓவியங்கள், பலதோற்றங்களில் - முழு ராணுவ ஒப்பனையில் பிரபாக

## தமிழ் இனத் தளபதி யார்?



— வீரமணியா? —

— பிரபாகரனா? —



படிப்பகம்



ரன் படங்கள் உள்ள பிரசுரங்கள் - படத் தொகுப்புகள், பிரபாகரனின் 'வீடியோ - கேஸெட்டு'கள் - இவற்றைத் தயாரிப்பதற்குத்தான் விடுதலைப் புலிகளின் பிரச்சாரப் பிரிவு அதிக நேரம், நிதி, சக்தியைச் செலவிடுகிறது. இப்படிச் செய்பவர்கள் பிரபாகரனின் மதிப்பைப் பெறுகிறார்கள்; இவற்றைப் பிரபாகரனே மேற்பார்வையிட்டு நடத்துகிறார். ''எல்லாம் சரியாக இருந்தே தீரவேண்டும்!'' என்கிற பிரபாகரனின் கண்டிப்பான - தீர்க்கமான கண்ணோட்டமே அவர் மேற்பார்வையிடக் காரணம் என்று கூறிக் கொள்கிறார்கள்.

பிரபாகரன் மீது தனிநபர் மோகம், தனிநபர் வழிபாடு ஆகியவற்றை பரப்புவதற்காக நெடுமாறன், வீரமணி, சாலை இளந்திரையன் போன்ற இனவாத, பிழைப்புவாதிகளையும் ஜூனியர் விகடன் போன்ற முதலாளித்துவ ஏடுகளையும் விடுதலைப் புலிகள் வளைத்துப் போட்டுக் கொண்டுள்ளனர். இவர்களில் பலருக்கும் அதற்காக மேலை நாடுகளுக்குப் பயணச் செலவுகளும், ஊதியங்களும் அளிக்கப்படுகின்றது.

இன்று நேற்றல்ல. ஆரம்பத்தில் இருந்தே இந்தப் பிரச்சாரம், சுயவிளம்பரத்தில் கவனமாய் இருக்கிறார், பிரபாகரன். இப்போது ஈழத்தில் இராணுவ ரீதியிலான வெற்றி காரணமாக பிரபாகரன் துதிபாடும் பிரச்சாரத்தை இந்திய, ஈழத்தமிழர்கள் தயக்கமின்றி ஏற்றுக்கொள்வார்கள் என்று பல மடங்கும் படுவேகமாகவும் முடுக்கி விடுகிறார்கள்.

இங்கேயும், உலகின் பல நாடுகளுக்குப் போயும் பிரபாகரன் துதிபாடும் வீரமணி, சாலை.இளந்திரையன், கி.ஆ.பெ. விசுவநாதன் போன்றவர்களாகட்டும், ஈழத்துக்குப்போய் வந்த கேர்பார்லசாமி, நெடுமாறன், தி.க.வின் டி.எஸ்.மணி போன்றவர்களாகட்டும், புலிகளின் நம்பிக்கைக்குரிய ஜூனியர் விகடன் செய்திகளாட்டும் - என்ன கூறுகிறார்கள்?

''பிரபாகரன் - போர்க்களத்திலே நேருக்குநேர் நின்று வீர தீரசாகசங்கள் புரிந்தவர், தனியே நின்று ஒன்பது பேரைச் சுட்டு வீழ்த்தியவர்! போர்க்கள நுணுக்கங்களைப் புரிந்து கொண்டு பாசறையில் இருந்து கொண்டே படையினரை வழி நடத்தும் வல்லமை பெற்றவர்! எந்தவித நவீன ரகத் துப்பாக்கிகள், ஏவுகணைகள், கண்ணி வெடிகளைக் கையாள்வதிலும் திறமையானவர்! சக போராளிகள் மீது பாசமிக்கவர்! சகபோராளிகளின் மதிப்பைப் பெற்ற கட்டுப்பாடும்



## பிரபாகரன் துதி!

www.padippakam.com

''ஐந்து உலக விடுதலை வீரர்களின் ஒருமித்த பலம் கொண்டவர் பிரபாகரன்'' ''தமிழ்த்தாய் ஓராயிரமாண்டு தவமிருந்து பெற்ற வராது வந்த மாமணியாக அவர் திகழுகிறார்.'' ''வீரமே ஆரமாகவும், தியாகமே அணியாகவும் பூண்ட 'தம்பி' பிரபாகரனுக்கு உலகத் தமிழினம் பல்லாண்டு! பல்லாண்டு கூறுகிறது!''

— நெடுமாறன்

''ஆறு கோடி தமிழர்களுக்கு ஒரேயொரு மாவீரன் பிரபாகரன்! இத்தகைய வீரன் ஒருவன், புறநானூற்றுக்குப் பிறகு இரண்டாயிரம் ஆண்டுகளாக எவனும் தோன்றியதில்லை.''

— கி.ஆ.பெ.விசுவநாதம்.

கடமையுணர்வு மிக்க தளபதி!'' என்று 'சான்று'களோடு பிரச்சாரம் செய்கிறார்கள்.

''பிரபாகரனின் கண்களைக் கட்டிவிட்டு, எதிரியிடம் பிடிபட்ட 30 ரக துப்பாக்கிக் குண்டுகளைப் பரப்பி வைத்ததும் ஒவ்வொன்றையும் தொட்டுப் பார்த்து எந்தத் துப்பாக்கிக்கு எந்தக் குண்டு உரியது என்று மிகச் சரியாகக் கூறுகிறார்''

''போர் முனையின் நிலைமைகளை 'வீடியோ' பிடித்துவந்து பிரபாகரனிடம் போட்டுக் காட்டுகிறார்கள். அவற்றைப் பார்த்துவிட்டு பிரபாகரன் வகுக்கும் திட்டத்தை 'வீடியோ' எடுத்து போர்முனைக்குப் போகிறார்கள். கடைசியில் தாக்குதல் நடப்பதும் 'வீடியோ' எடுக்கப்பட்டு பிரபாகரனுக்கு வந்து சேருகிறது''

''உறங்கும்போதும் கூட எந்நேரமும் சிந்தனையோடு இருக்கும் வீரனைப்போல உறங்குகிறார். புதுயோசனைகள் வந்தால் திடீரென்று எழுந்து உடனே அமுலாக்குகிறார். ஒருமுறை நள்ளிரவில் கண்ணிவெடி பற்றிய ஒரு 'ஐடியா' வந்து, ரசாயனப் பிரிவினரை அழைத்து, கண்ணி வெடி உருவாக்கி இந்திய இராணுவத்தினால் துரோகத்தனமாக கொல்லப்பட்ட ஜானியின் பெயர் சூட்டினார் - அப்புறம் தான் அவரது ஆத்திரம் தணிந்தது.'' (ஜூனியர் விகடன் 31.1.90)

''மூன்று புலிக் குட்டிகள் வளர்க்கிறார்; குறிதவறாமல் சுடுகிறார்; வையர்லஸ் மூலமாகவே உத்திரவுகள் போட்டு சண்டைகள் நடத்துகிறார்'' இப்படிப் பல கதைகள் சொல்லுகிறார்கள்.

இவையெல்லாம் போர்த்துறையில் பிரபாகரனின் திறமையை மட்டும் கூறவில்லை. அவரது விளம்பர உத்திகளையும் எதிரிகளின் பலவீனங்களையும் கூடச் சொல்கின்றன.

சரி! இந்தத் திறமைகள் எல்லாம் ஒருவனுடைய வீரத்தைக் குறிப்பதாகுமா? இன ஒடுக்குமுறை, ஆதிக்க - ஆக்கிரமிப்பு போன்ற அநீதிகளை எதிர்த்து நியாயமான இலட்சியத்துக்காகப் போரிடும்போது தான் அவை வீரமாக மதிக்கப்பட வேண்டும். பிரபாகரன் இவை மட்டுமா செய்தார்?

இந்திய உளவுபபடையான ரா'வின் கட்டளைகளை ஏற்று அனுராத புரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்களக் குழந்தைகள், பெண்கள், முதியவர்களைக் கை, கால், தலை வெட்டிக் கோரமாகக் கொன்றது; பஸ் - ரெயில்களுக்கு வெடிவைத்தும் சிங்கள கிராமங்களுக்குள் புகுந்தும் படுகொலைகள் செய்தது; கருத்து மாறுபட்டதற்கோ, குழுப் போட்டி காரணமாகவோ நிராயுதபாணிகளான சகபோராளிகளையும், ஈழத் தமிழ் சிவிலியன்களையும் இரகசியமாகக் கொன்றுவிட்டு நியாயப்படுத்த முடியாமல் மறுப்பு அறிக்கைகள் விடுவது - பிரபாகரனின் இந்த வகையிலான துப்பாக்கித் துரைத்தனம் எந்த வகையிலான வீரம்?

படையணியில் நின்று போரிடாத போது எதிரி இராணுவத்தனரைக் கூட மனிதாபிமானத்தோடு நடத்தவேண்டும் என்பது தானே நேர்மையான வீரமாகும்? ஆனால் மேற்கண்டவை எல்லாம் பிரபாகரனின் குரூரமான கொலைவெறி, வக்கிரமான அதிகாரப் பேரசையின் விளைவுகள் என்றுதானே கூறமுடியும்!

இராணுவ ரீதியில் வெற்றி வீரனாகப் புகழப்படும் பிரபாகரன் அரசியல் ரீதியில் எவ்வளவு தூரம் தவறுகளையும் முட்டாள் தனங்களையும் செய்துள்ளார் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. இந்தியாவில் பாசிச இந்திரா, ராஜீவ் கும்பலோடு கூட்டுச்சேர்ந்து இந்திய மக்களுக்கும் புரட்சிக்கும் செய்த துரோகம்; இந்திய உளவுப் படை 'ரா'விடம் இயக்கத்தை அடகுவைத்து அதன் கட்டளைகளை ஏற்றது; கருணாநிதி, எம்.ஜி.ஆர். போன்ற இந்திய அரசியல் பிழைப்புவாதிகளுடன் மாறிமாறிக் கூட்டு வைத்துக் கொண்டது; இந்திய, இலங்கை அரசுகளிடம் பதவிக்கும், பணத்திற்கும் பேரங்கள் நடத்தியது - இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

வரலாற்றில் தனிநபர்கள் ஆற்றும் சிறப்பான பணிகளுக்காக அவர்கள் முக்கியத்துவம் பெறுவதுண்டு. ஆனால் அந்தந்த நபர்களின் ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் அவை தீர்மானிக்கபட முடியும். ஒருவனுடைய அர

## பிரபாகரன் துதி!

''புறநானூற்றைப் புரட்டினால் அங்கே, எங்கள் தளபதி பிரபாகரன்''

''3000 ஆண்டுகளுக்கு முன்பே, இந்தப் பிரபாகர மறவனை முன்னுணர்ந்து புறநானூற்றுப் புலவன் பாடினான்'' ''3000 ஆண்டுகளாக முனை மழுங்கிக் கிடந்த தமிழ் வீரத்தை நினைத்து நினைத்துப் புலம்பினேன். புறநானூற்றுப் புத்துயிர்ப்புப் பாடல் பாடி எனக்கு நானே நம்பிக்கையூட்டிக் கொண்டேன். அந்த நம்பிக்கையின் வடிவமாக வீர உதயம் செய்த என் இளவலே,

எங்கள் இனத்தின் தளபதியே, தமிழ் மரபை மீட்டுக் கொணர்ந்த நீ, தமிழனின் அனைத்துப் பெருமைகளையும் மீட்டுக் கொண்டு வரப்போகிறாய்.''



படிப்பகம்

www.padippakam.com



## ஜோதிப்பிரகாசம்!

இந்திய மக்கள் முன்னணிக்குள் புகுந்து ஒரு புரட்சிகர அமைப்பை சீரழித்தன ஏகாதிபத்திய உளவு நிறுவனங்களான தன்னார்வக் குழுக்கள். ஈழப் போராளி அமைப்புகளுக்குள் புகுந்து பிளவுபடுத்தி, மோதவிட்டு ரத்தம் குடித்தது இந்திய உளவுப்படை 'ரா'. அதே நோக்கங்களுக்காக டிராட்ஸ்கியவாதிகளாலும் 'ரா'வாலும் உருவாக்கப்பட்டுள்ளது, ஜோதிப்பிரகாசம் தலைமையிலான ஒரு தமிழ் தேசிய இன விடுதலை அமைப்பு.

சியல் பொருளாதார, சமூகக் கருத்தோட்டங்கள் எல்லாம் எப்படிப்பட்டவை என்பதை ஒதுக்கிவிட்டு அவனுடைய இராணுவச் சாதனைகளை மட்டும் வைத்து எடைபோடுவது துப்பாக்கியை ஆணையில் வைப்பதாகும்.

பிரபாகரனின் அருமை பெருமைகள் என்று அவரைத் துதிபாடுபவர்கள் அடுக்குபவைகள் கூட ஒரு இராணுவத்தின் தளபதிக்குரிய திறமைகள் மட்டுமே; ஒரு தேசத்தின், மக்களின் தலைவனுக்குரிய தகுதிகள் என்று கூறிவிட முடியாது. உலகின் பல நாடுகளிலும் அரசியல் தலைமையைத் தூக்கி எறிந்துவிட்டு இராணுவத் தளபதிகள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு காட்டுமிராண்டித்தனமான ஆட்சி நடத்துவதைப் பார்க்கிறோம்.

மாபெரும் அரசியல் தலைவர்களாகவும், மிகச் சிறந்த இராணுவத் தளபதிகளாகவும் இருந்த மாவோ, ஸ்டாலினைக்கூட பிரபாகரனோடு ஒப்பிட்டு அவரது துதிபாடிகள் பேசக்கூடும். அப்படி செய்தால் அது இவர்களுடைய அறியாமையைத் தான் குறிக்கும். யதார்த்தத்துக்குப் பொருந்தாத கற்பனாவகை தேசிய சோசலிசம் (உண்மையில் முதலாளிகள் - நிலப்பிரபுக்களுடன் கூட்டு) தேசிய இனவெறி, தனிநபர் வழிபாடு ஆகிய கொள்கைகளை உடைய பிரபாகரன் இன்னொரு பாசிச சர்வாதிகாரியாவதற்கான அடிப்படைதான் இருக்கிறது; இன்னொரு சோசலிசத் தலைவராவதற்கான அடிப்படை கிடையாது.

அரசியலைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுத் துப்பாக்கியை ஆணையில் வைப்பதன் விளைவுகள் - விபரீதங்கள் எப்படி இருக்கும் என்பதை இப்போதே பிரபாகரன் செய்து காட்டுகிறார். எந்தவொரு கருத்து மாறுபாட்டையும் துப்பாக்கி முனையில் தான் தீர்ப்பதுதான் முடிவாகும். இவ்வளவு காலமும் புலிகளுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு இயங்கிய முஸ்லீம் அமைப்பினரோடு வேறுபாடுகள் தோன்றியதும் கொலைகள் செய்வது; கடத்திக் கொண்டு போய் துப்பாக்கி முனையில் பணிய வைப்பது என்ற தமது வழக்கமான முறைக்குத் தாவி விட்டார்கள் புலிகள்.

மாற்று இனத்தவரிடம் மட்டுமல்ல, மாற்று அமைப்புகளிடம் மட்டுமல்ல, தன் இனத்தாரிடையே, தன் அமைப்புக்குள்ளேயே கூட இந்தத் துப்பாக்கித் துரைத்தனம் நீளும். ஏற்கனவே மற்ற பிற ஜனநாயக அமைப்புகளை ஈழத்தில் செயல்படக் கூடாது என்று தடை விதித்திருப்பது; சமூக விரோதிகள், துரோகிகளைத் தண்டிப்பது என்கிற பெயரில் இரகசியக் கொலைகள் செய்வது ஆகியவை இதையே எச்சரிக்கின்றன.

இதற்காகவா ஈழத் தமிழர்கள் இவ்வளவு இரத்தம் சிந்தினார்கள். மாற்றானது இன ஒடுக்கு முறையை விட, தன்னினத்தானின் பாசிச சர்வாதிகாரம் பரவாயில்லை என்று சகித்துக் கொள்ள முடியுமா? இந்தக் கேள்வி ஈழத்தமிழரின் நெஞ்சிலே எழுந்து நிற்கிறது. பிரபாகரன் மீது உருவாக்கி வளர்க்கப்படும் தனிநபர் மோகம், தனிநபர் வழிபாடு, அவற்றின் விளைவுகள் - விபரீதங்கள் குறித்து ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல, இந்தியத் தமிழர்களையும் நாம் எச்சரிக்கிறோம். ஏனெனில் பிரபாகரனின் துப்பாக்கித் துரைத்தனம் ஈழத்தோடு நிற்காது. இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டுக்கும் அவர் அதை விரிவுபடுத்துவார் அதற்கான அடிப்படைகள் இங்கேயும் உள்ளன.

வடகிழக்கு இந்தியாவிலும், வடக்கே காஷ்மீரிலும் நடக்கும் தேசிய இனப் போராட்டங்களை பகிரங்கமாக ஆதரிப்பதில் மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் தாம் முன்னோடிகளாக விளங்குகின்றனர். இங்கே தமிழகத்திலும் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை ஆதரிப்பதில் எவருக்கும் நாம் பின்தங்கியவர்களாக இல்லை.

ஈழ விடுதலைப் போரின் விளைவாக இந்தியாவிலும் 'தனித்தமிழ்' நாடு கோரிக்கை'யைப் முன் வைத்துப் பல குழுக்கள் தோன்றியுள்ளன. அவற்றிலே சில குழுக்கள் ஆயுதப் போராட்டப் பாதையை தெரிவு செய்து கொண்டுள்ளதாக அறிவிக்கின்றன. அதே சமயம் அவை திராவிட இயக்கங்கள், மற்றும் இனவாத, பிழைப்புவாத சக்திகளுடன் சந்தர்ப்பவாதக் கூட்டுகள் வைத்துக் கொண்டுள்ளன. சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை அடைவதற்கான பாதையாக மக்கள் திரள் ஆயுதப் போராட்டத்தை அவை மேற்கொள்ளவில்லை. தனிநபர் பயங்கரவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளன. இதற்காக சீரழிந்து போன ஈழப் போராளிகள் மற்றும் விடுதலைப் புலிகளது ஆதரவைப் பயன்படுத்திக் கொள்வது தவறில்லை என்று அந்த பயங்கரவாதக் குழுக்கள் கருதுகின்றன. இப்படிப்பட்டதொரு கூட்டு தமிழ்தேசிய இனவெறியர்களாகவும், பாசிஸ்டுகளாகவும் அந்தக் குழுக்களை சீரழித்துவிடுவது தவிர்க்க முடியாது.

'அகில இந்திய தேசிய' வெறியையும் மதவெறியையும் பரப்புவதற்காக இங்கே ஒரு பார்ப்பனக் கூலிப் பிரச்சாரக் கும்பல்
உருவாகி இருப்பதைப்போல பிற்போக்
தமிழ்தேசிய இனவாதத்தையும் பிரபாகர
வழிபாட்டையும் பரப்புவதற்காக இங்
ஒரு 'திராவிட - தமிழ்' தேசியக் கூலிப் பிர
சாரக் கும்பலும் தோன்றியிருக்கிறது. இ
ஏன் பிற்போக்கு தமிழ்தேசிய இனவாத
என்கிறோம்?

• ''உலகம் முழுவதும் வாழும் ஆறுகே
டித் தமிழர்களும் ஒரே இனம். இந்தியாவி
உள்ளது தாய்த் தமிழகம். பிரபாகரன் உலக
தமிழினத்தின் தளபதி!'' என்ற கருத்தை வீ
மணி, நெடுமாறன், சாலை இளந்திரைய
போன்ற இனவாத, பிழைப்புவாதத் தலை
வர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். அப்ப
அவர்கள் கூறுவதில் வியப்பில்லை
ஆனால் மார்க்சியம் - லெனினியம்
மாவோ சிந்தனையைச் சித்தாந்த வழிகாட்
யாக ஏற்றுக் கொள்வதாகக் கூறும் இனவா
- பயங்கரவாதக் குழுக்கள் என்ன செய்கி
றன?

ஒரே மொழி பேசுபவர்கள், ஒரே மத
தைச் சேர்ந்தவர்கள் போன்ற பொதுத்த
மைகளுக்காக வெவ்வேறு நாடுகள், தேசா
களில் வாழும் மக்களை ஒரே தேசிய இனம
கக் கருதுவது மிகவும் பிற்போக்கானது. இ
- மொழி - மதவெறியைத் தான் அதுதோற்
விக்கும். எனவேதான் 23 நாடுகளில் வாழு
அராபியர்கள், ஒரே மொழியைப் பேசின
லும், ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களானாலு
ஒரே இனத்தவர்கள் அல்ல; அமெரிக்கா
கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளி
வாழ்பவர்கள் ஒரே மொழி, மதத்தைச் சேர்
தவர்கள் என்றாலும் ஒரே இனத்தவர்க
அல்ல என்று லெனினும் ஸ்டாலினும் எதிர்
தார்கள்.

ஆகவே 'உலகம் முழுவதும் வாழும்
தமிழினம், தமிழினத் தளபதி' என்கிற கூலி
பிரச்சாரம் பிற்போக்கானது; பிரபாகரன்
போன்ற நபர்கள் இன்னொரு தமிழ் தேசிய
இனத்தின் விவகாரங்களில் தலையிட
அழைப்பு விடுப்பதாகும்; அடிப்படையைத்
தயாரிப்பதாகும். இதே பிற்போக்கான
அடிப்படையில் தான் எம்.ஜி.ஆரும் கரு
ணாநிதியும் மட்டுமல்ல; இந்திரா - ராஜீவ்
கும்பலும் ஈழத்தமிழ் மக்களின் விவகாரத்
தில் தலையிட்டு கேடு விளைவித்தனர்.

தேசிய இன (NATIONAL) பிரச்சி
னையை திராவிட இயக்கதினர் வர்ண இன
(RACIAL) ரீதியிலானதாகத் திரித்து சிதைத்த
னர். இப்போது தமிழ் இனவாத - பிழைப்பு
வாதத் தலைவர்கள் தேசிய இன (NATIO-
NAL) பிரச்சினையைத் திரித்து அனைத்து
நாட்டுத் தமிழர்களும் ஓரினம் என்கிற பிற்
போக்கு முழக்கத்தைப் பிரச்சாரம் செய்கி
றார்கள். 'தனித் தமிழ்நாடு - சுயநிர்ணய உரி
மை' கோரும் குழுக்கள் சந்தர்ப்பவாதமான
முறையில் இந்த இரண்டு தவறான, பிற்
போக்கான கருத்துக்களோடும் சமரசம்
செய்து கொள்கிறார்கள். ஒன்று ஓட்டுக் கட்
சிப் பிழைப்பு வாதத்திலோ அல்லது பிரபாக
ரன் போன்றவர்களது பாசிச பயங்கரவாதத்
திலோ தமிழர்களை மூழ்கடிக்கும் இந்தப்
போக்குகள் அனைத்துக்கும் எதிராக இந்
திய, ஈழத்தமிழர்கள் எச்சரிக்கையாய்
இருந்து முறியடிக்க வேண்டும்.

■ மாணிக்கவாசகம்

படிப்பகம்

www.padippakam.com

# தோல்விக்குப் பின்னும் நீளும் பாசிச நாக்கு!

நடந்து முடிந்த தேர்தலில் பாசிச ாங்கிரசுக் கட்சி வடமாநிலங்களில் மாபெ நம் தோல்வியைச் சந்தித்தது. காங்கிரசின் ரம்பரை சர்வாதிகார ஆட்சிக்கு மக்கள் மது எதிர்ப்பைத் தெரிவித்து தேர்தலில் ரண அடி கொடுத்தனர். இனிமேலாவது ாங்கிரசுக் கட்சி தனது லஞ்ச ஊழல் அதிகார றைகேடுகள் முதலான குற்றங்களை ணர்ந்து திருந்தும்; நாடாளுமன்ற ஜனநா கத்தின் ஆரோக்கியமான எதிர்க்கட்சி ாக செயல்படும் என்று முதலாளித்துவ அறிஞர்கள் எதிர்பார்த்தனர்.

''ஜனநாயகத்தில் வெற்றி தோல்விகள் ாதாரணமானது'' என்று தேர்தல் முடிவுகள் ற்றி பாசிச ராஜீவ் பெருந்தன்மையோடு பேட்டி அளித்ததையும், ''சிறுபான்மை அர ானாலும் புதிய அரசுக்கு ஆக்கபூர்வமான த்துழைப்பைத் தருவோம்!'' என்று கூறிய தையும் அவர்கள் வெகுவாகப் பாராட்டி ார்கள். தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து, முன்னாள் ஊழல் முதல்வர் ளை பொறுப்பில் இருந்து நீக்கி, கட்சியைச் ரமைக்க ராஜீவ் மேற்கொள்ளும் நடவடிக் கைகளை ஆக்கபூர்வமான பணியாகச் சித்த ித்தனர்.

சுருக்கமாகச் சொன்னால் காங்கிரசுக் கட்சி மற்றும் ராஜீவ் கும்பலின் பாசிசத் தன் மையே படிப்படியாக மறைந்து வருவதைப் போல் ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி ார். ஆனால் பாசிச கும்பலின் இந்த ஜனநா க சீரமைப்புகள் ஒருமாதம் கூட தாக்குப் பிடிக்கவில்லை. அதற்குள்ளாகவே காங்கி சு கலாச்சாரப்படி கட்சிக்குள் கோஷ்டி தக ாறுகள் உச்சக்கட்டத்தை அடைந்ததோடு, ாட்டை எதிர்கொண்டுள்ள பிரச்சினைக ளுக்கு பாசிசக் கொள்கைகளையே தீர்வாக முன்வைத்துள்ளது ராஜீவ் கும்பல்

''காஷ்மீர் தீவிரவாதிகளிடம் அரசு பணிந்துவிட்டது.. தீவிர நடவடிக்கை எடுக் கத் தவறிவிட்டது. தீவிரவாதிகளுக்குப் பணியும் அரசிடம் நாட்டின் பாதுகாப்பு விடப்பட்டுள்ளது முறைதானா?'' என்று மத் திய உள்துறை மந்திரியின் மகள் காஷ்மீர் விடுதலை முன்னணியினரால் கடத்தப்பட்டு பின்னர் மீட்கப்பட்ட சம்பவத்தைப் பற்றி, தனது அரசு பயங்கரவாத தீர்வை முதலில் வெளிக்கொட்டினார் பாசிச ராஜீவ். அதைத் தொடர்ந்து ராஜ்யசபையிலும் மே.வங்க சட்ட சபையிலும் மத்திய அரசைச் சாடி காங் கிரசார் வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் காஷ்மீர் பிரச்சினை தீவிரமா னதும், ''நாங்கள் ஆட்சி செய்தபோது பயங் கரவாதிகளை அடக்கி கைதுசெய்து சிறையி லடைத்தோம். அப்போது காஷ்மீரில் அமைதி நிலவியது. இப்போது மத்திய அரசு தீவிரவாதிகளிடம் பணிந்து விட்டதால் கல வரமும் குழப்பமும் தலைவிரித்தாடுகிறது. தீவிரவாதிகளை பாகிஸ்தான் அரசு ஆத ரித்து ஊக்குவிக்கிறது. காஷ்மீர் பிரிவி னையை பெனாசிர் ஆதரித்து அறிக்கை விடும்போது அதைக் கண்டிக்க துணிச்சல் இல்லாமல், பாகிஸ்தான் வெளியுறவு மந்தி ரியை மத்திய அரசு வரவேற்கிறது. நான் பொறுப்பில் இருந்திருந்தால் பாக்.மந்தி ரியை வரவேண்டாம் என்று சொல்லி இருப் பேன். ஒருவேளை வந்தால் திரும்பிப் போ என்று அனுப்பியிருப்பேன்'' என்று ஆவேச மாக பேட்டியளித்தார் பாசிச ராஜீவ். சென்னை பொதுக்கூட்டத்திலும் இதையே வலியுறுத்தினார்.

ஓட்டுக்கட்சிகளின் அரசியல் கலாச்சா ரத்தின்படி, எதிர்கட்சித் தலைவர் வழக்கம் போல் ஆளுங்கட்சியை சாடுவதாக இதைக் கருதிவிட முடியாது. உண்மையில் இவை பாசிச ராஜீவ் கும்பலின் கொள்கைகள்தான். ஆட்சிப் பொறுப்பில் இருந்தவரை அது பின் பற்றிய அரசு பயங்கரவாத கொள்கைதான்.

இதை மேலும் உறுதிப்படுத்தும் வகை யில் ''காஷ்மீர் தீவிரவாதிகளிடம் என்றைக் குமே காங்கிரஸ் அரசு பணிந்தது கிடை யாது. காஷ்மீர் விடுதலை முன்னணியின் நிறுவனர் மகபூல் பட்டை தூக்கில் போட்டு, பயங்கரவாதத்தை அன்னை இந்திரா அடக் கினார்'' என்று தமது பரம்பரை ஆட்சியின் அரசு பயங்கரவாத அடக்குமுறையை நியா யப்படுத்தி பேசுகிறார் பாசிச ராஜீவ்.

இதே போல, ''பஞ்சாபில் பயங்கரவா திகளை கைது செய்வதற்குப் பதில் அவர் களை விடுதலை செய்து, சிறுபான்மை இந் துக்களுக்கு பாதுகாப்பில்லாமல் செய்துவிட் டது புதிய அரசு. இதனால் இந்துக்கள் பலர் பஞ்சாபிலிருந்து வெளியேறும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பிரிவினைவாதிகளுக்கு சலுகை காட்டுவது நாட்டை விற்பதற்கு ஒப் பானது'' என்று தமது அரசு பயங்கரவாத வெறியைக் கக்குகிறார். ''ஆந்திராவில் நக்ச லைட்டுகளுக்குப் பணியாத சென்னாரெட்டி அரசை நான் பாராட்டுகிறேன்'' என்று தமது கட்சியின் நரவேட்டைக் கொள்கையை ஆத ரிக்கிறார்.

மேலும், ''ஈழத்தில் அமைதி ஏற்படுவ தற்கு முன்பே அமைதிப்படையை திரும்ப அழைப்பது முட்டாள்தனமானது; இலங்கை அரசுக்கு இந்திய அரசு அடிபணிந்து விட்ட து'' என்று ஆக்கிரமிப்பு - மேலாதிக்க வெறியை வெளிப்படையாக கொட்டுகிறார்.

பாசிஸ்டுகள் தோல்விக்குப் பிறகும் கூட திருந்தியதாகவோ, தமது கொள்கை களை மாற்றிக் கொண்டதாகவோ வரலாறு இல்லை. அதுவும், புதிய அரசிடம் வேறு மாற்றுத் தீர்வு ஏதும் இல்லாத நிலையில் தமது பாசிசக் கொள்கைகளுக்கு ஆதரவு பெருகி இச்சிறுபான்மை அரசு விரைவில் வீழ்ந்து விடும் என்றே பாசிச ராஜீவ் கும்பல் நம்புகிறது. ஆனால், சமூக விரோதிகள், பிழைப்புவாதிகளின் கூடாரமான காங்கிரசு கட்சிக்குள் கோஷ்டி சண்டைகள் முற்றி ராஜீ வையே கதிகலங்கச் செய்கின்றன.

ராஜீவின் பாசிசக் கொள்கைகளுக்கு ஏற்ப அதன் கட்சியும் பாசிசக் கட்சியாகவே உள்ளது. காங்கிரசு கட்சிக்குள் ஒருபோதும் ஜனநாயகம் நிலவியது கிடையாது. பெரும் பான்மை வாக்கு பெற்று சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் தலைவரான போது காங் கிரசிலிருந்து விலகுவதாக மிரட்டி தனது தனிமனித சர்வாதிகாரத்தை அன்று நிறுவி னார் காந்தி. அதன்பிறகு நேரு - இந்திரா - ராஜீவின் குடும்பச் சொத்தாக காங்கிரசு மாற றப்பட்டது. இந்திரா காலம் வரை பெயரள விற்கே காங்கிரசில் தேர்தல் நடந்தது. அதன் பிறகு கடந்த 20 ஆண்டுகளாக தேர்தல்களே கிடையாது. மாநில முதல்வர்கள் உட்பட அனைத்தும் ராஜீவைச் சுற்றியுள்ள விசுவாச கும்பலாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

வடமாநில தேர்தல் தோல்விக்குப் பிறகு, மாநில முதல்வர்களை மாற்றி எதிர் கோஷ்டித் தலைவர்களை முதல்வராக நிய மித்தும் கூட காங்கிரசுக்குள் கோஷ்டிப் பூசல் கள் ஓயவில்லை.

ராஜஸ்தானில் முதல்வர் ஜோஷிக்கு எதிராக 5 காபினெட் மந்திரிகள் பதவி விலகி கலகம் செய்கின்றனர். பீகாரில் ஜெகந்நாத் மிஸ்ராவும், பகவத்ஜா ஆசாத்தும் ஆளுக் கொரு கோஷ்டியாக நின்று மோதிக்



தமிழகத்துக்கு வந்த ராஜீவ் - மலா கா டத்துடன்: அ.தி.மு.க. - ஜெயலலிதா தயவில் மஞ்சள் குளிக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com

காங்கிரசு மாநில முதல்வர்கள்: கர்நாடகம் - பட்டீல்; ஆந்திரா - சென்னா ரெட்டி; பீகார் - ஜெகன்னாத் மிஸ்ரா; குஜராத் - சோலங்கி; ம.பி. - சுக்லா — பழம் பெருச்சாளிகள் திரும்பவும் திணிக்கப்பட்டும் கூட கோஷ்டிப் பூசல் தீரவில்லை.











ளிடமிருந்து மேலும் அந்நியப்பட்டுப் போகும்வகையில், டெல்லியில் ஐந்தரை கோடி ரூபாய் செலவில் ஜவஹர் பவன் என்ற பெயரில் நான்கு மாடி மாளிகையில் கட்சி அலுவலகத்தை புதிதாக அமைந்துள்ளது பாசிச ராஜீவ் கும்பல். நவீன எலக்ட்ரானிக் சாதனங்கள், கம்ப்யூட்டர்களைக் கொண்ட இந்த கட்சி அலுவலகத்தில் 'சோசலிச' கழிப்பறை முறை ஒழிக்கப்பட்டு ராஜீவுக்கென தனிக் கழிப்பறை அமைக்கப்பட்டுள்ளது.

மேலைநாட்டு மோகத்துடன் கட்சி அலுவலகத்தை திறந்து வைத்தக் கொண்டு ஓட்டுக்காக மட்டும் இந்திய விவசாயியாக வேடம் கட்டிக் கொண்டு அரசியல் வியாபாரம் செய்யக் கிளம்பியுள்ளது பாசிச ராஜீவ் கும்பல். இந்த வக்கிர கூத்துக்களால் அது மக்களிடமிருந்து மேலும் தனிமைப்பட்டுப் போகும். ஏற்கனவே வட மாநிலங்களில் உதைபட்டு, தென் மாநிலங்களில் பிராந்தியக் கட்சி அளவுக்குச் சுருங்கிப் போய்விட்ட காங்கிரசு நச்சு மரத்தை உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து வெட்டிச் சாய்க்கவேண்டும். பாசிச அபாயத்தை முறியடிப்பதில் இது முக்கியமான பணியாகும். ■ குமார்

கொண்டு கட்சியையே பிளவுபடுத்தி விட்டனர். உ.பி.யில் முன்னாள் முதல்வர் திவாரி கோஷ்டியும், மாநிலகட்சித் தலைவரான பல்ராம்சிங் யாதவ் கோஷ்டியும் வெளிப்படையாக மோதிக் கொண்டு போலீசார் வந்து சமரசப்படுத்த வேண்டியதாயிற்று. தமிழகத்தில் மூப்பனார் - வாழப்பாடி கோஷ்டி மோதல்கள் சந்தி சிரிக்கின்றன. கர்நாடகத்தில் காங்கிரசு வெற்றி பெற்றதும், அமைச்சர் பதவிக்கான நாய்ச்சண்டை தீவிரமாகி, கடைசியில் ராஜீவே நேரில் வந்து சமரசம் செய்ய வேண்டியதாயிற்று. குஜராத்தில் அமர்சிங் சௌத்திரிக்கு பதிலாக சோலங்கி முதல்வராக நியமிக்கப்பட்டதும் 50 எம்.எல்.ஏக்கள் பதவி விலகப் போவதாக பயமுறுத்தினர். பின்னர் பகத்தும், பஜன்லாலும் வந்து தற்காலிக சமரசம் செய்து வைத்தனர்.

இத்தகைய கலகங்கள் மற்றும் கழுத்தறுப்புகளால் கட்சியை சீர்படுத்துவதல்ல அவர்களின் நோக்கம். மாறாக பதவி எலும்புத் துண்டுகளுக்காகத்தான் இந்த நாய்ச் சண்டை. எனவேதான் பாசிச ராஜீவ் கும்பலும் சுழற்சி முறையில் ஒவ்வொரு கோஷ்டிக்கும் மாற்றி மாற்றி பதவிகளைக் கொடுத்து சாந்தப்படுத்தி வருகிறது. ஆனால் கோஷ்டி தகராறுகளால் அழுகி நாறும் காங்கிரசு மேலும் பரந்துபட்ட மக்களின் ஆதரவை இழந்து அடியற்ற மரமாகி வருகிறது. எனவேதான் வரப்போகும் சட்டமன்றத் தேர்தல் வெற்றியைக் குறிவைத்து கண்ணை மூடிக் கொண்டு கஜானாவையே காலியாக்கும் வகையில் நல்வாழ்வு - கவர்ச்சித் திட்டங்களை வாரியிறைக்கிறது.

ஆனால் மக்கள் நலனுக்கும் காங்கிரசுக்கும் வெகுதொலைவு என்பது நாற்பதாண்டு அனுபவம் காட்டும் உண்மை. நேற்றுவரை மத்திய மந்திரிகளாக இருந்து நாட்டைச் சூறையாடிய பாசிச ராஜீவின் கூட்டாளிகளான கே.கே.திவாரி, சிவசங்கர், அன்சாரி முதலானோர் இன்று தமது எஸ்டேட் - பண்ணை வீடுகளில் உல்லாசமாகப் பொழுதைக் கழித்து வருகின்றனர். இதைவிட, மக்க

## காங்கிரசின் வெறியாட்டம்

தேர்தலில் படுதோல்வி அடைந்தாலும் காங்கிரசின் பாசிசத்தன்மை ஒருபோதும் மாறிவிடாது. தென்மாநிலங்களில், குறிப்பாக ஆந்திராவில் அது வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததும், இரட்டிப்பு வெறியோடு தெலுங்கு தேசக் கட்சிக்கு வாக்களித்த மக்களைப் பழிவாங்கும் பயங்கரவாதத்தை பாசிச காங்கிரசு கும்பல் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

படிகட்டாதண்டா. ஆந்திராவின் மிர்யால்குடி - நாகார்ஜுனசாகர் நெடுஞ்சாலையில் திரிபுரம் நகருக்கு 10 கி.மீ. தொலைவிலுள்ள சிறிய கிராமம். லம்பாடா இன ஆதிவாசிகள் வாழும் சிற்றூர். நடந்து முடிந்த ஆந்திர தேர்தலில் இக்கிராமத்து மக்கள் தெலுங்கு தேசம் மற்றும் 'மார்க்சிஸ்ட்' கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இத்தொகுதியில் காங்கிரசு வெற்றி பெற்ற போதிலும், இதை சகித்துக் கொள்ள முடியவில்லை. எப்போது பழிவாங்கலாம் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தனர். கடந்த டிசம்பர் 3ந் தேதியன்று இத்தொகுதியில் காங்கிரசின் வெற்றிவிழா கூட்டம் நடந்து முடிந்ததும், தன்சிங் என்ற பஞ்சாயத்துத் தலைவரின் தலைமையில் 200 பேர் கொண்ட ரௌடிப் பட்டாளம் இந்த ஆதிவாசி மக்களுக்குப் பாடம் புகட்ட இரும்புத் தடி, கோடரிகளுடன் கிளம்பியது.

"எங்கள் கிராமமே அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த அந்த நள்ளிரவில் அந்தக் கொள்ளைக்காரர்கள் வந்தார்கள். ஆண்களை இரும்புத்தடியால் மிருகத்தனமாக தாக்கினர். சிறுகுழந்தைகளைக் கூட கண்மூன் தெரியாமல் அடித்தனர். பெண்களை மானபங்கப்படுத்தி சித்திரவதை செய்தனர். எங்களது அற்ப உடமைகளையும் சூறையாடினர்" என்று அந்த பயங்கரவாதத் தாக்குதலைப் பற்றி பீதியுடன் கூறுகிறார் லட்சுமம்மா என்ற மூதாட்டி.

காங்கிரசு கழிசடைகளின் வெறியாட்டம் இத்துடன் நின்றுவிடவில்லை. ஜீனா என்ற இளம் ஆதிவாசிப் பெண்ணின தாலியை அறுத்து பாலியல் வன்முறையை ஏவியதோடு, அவரது கணவரை கோடரியால் தாக்கினர். இன்னும் பல பெண்களின் கால் கொலுசு, கழுத்து சங்கிலிகளைப் பறித்து தாக்கியதோடு, காமவெறி பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்து விட்டனர். ஏறத்தாழ 3 மணிநேரத்திற்கு இந்த வெறியாட்டம் நடந்தது.

இப்பயங்கரவாதத் தாக்குதலால் பீதியுற்ற ஆதிவாசி மக்கள் தம் அற்ப உடமைகளைக்கூட அப்படியே போட்டுவிட்டு கிராமத்திற்கு வெளியே அகதிகளாக வெட்ட வெளியில் கிடக்கின்றனர். பீதியாலும், அவமானத்தாலும் தம் மீது ஏவப்பட்ட பாலியல் வன்முறையைப் பற்றி வெளியே தெரிவிக்க அஞ்சுவதை சாதகமாக்கிக் கொண்டு, போலீசார், ஒரு ஆதிவாசிப் பெண்தான் கற்பழிக்கப்பட்டார் என்று சாதிக்கின்றனர். பாசிச முதல்வர் சென்னாரெட்டியோ, யாருமே கற்பழிக்கப்படவில்லை; எதிர்கட்சியினர் ஆதிவாசிப் பெண்களை தூண்டிவிட்டு அவ்வாறு கூறச் சொல்கின்றனர் என்று அதிகாரத் திமிரோடு கொக்கரிக்கிறார்.

இக் காட்டுமிராண்டித் தனத்தைத் தொடர்ந்து, வால்மீகி எனும் பிற்பட்ட சாதியினர் தெலுங்கு தேசக் கட்சிக்கு வாக்களித்ததற்கு பாடம் புகட்ட குண்டிமட்டி எனும் கிராமத்தைச் சூறையாடி 53 குடிசைகளைத் தீயிட்டனர். நெல்லூர் மாவட்டம் கொண்டடாபுரம் கிராமத்தில் லட்சுமம்மா என்ற பெண்மணியை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக இழுத்து வந்து எதிர்க்கட்சியினரை எச்சரித்துள்ளனர்.

நேற்று, தன் தாயைக் கொன்ற ஆத்திரத்தில் சீக்கிய சமூகத்தையே பழிவாங்கியது பாசிச ராஜீவ் கும்பல்; இன்று வாக்களிக்காத மக்களையே தாக்கி பழிவாங்கும் வெறியோடு கடித்துக் குதறுகிறது. பாசிச காங்கிரசின் அட்டூழியத்துக்கும் அதிகாரத் திமிருக்கும் இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

www.padippakam.com



# துப்பாக்கி முனையில் தூக்கி நிறுத்தப்படும்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், ஜனநாயகத்துக்காக கொடுக்கப்பட்ட விலை இது. ஆரா, பீகார் மாநிலத்தின் ஒரு நாடாளுமன்ற தொகுதி. பாட்னா நகருக்கு மேற்கே போஜ்பூர் மாவட்டத்தினுள் அடங்கியிருக்கும் நகரம். அங்கிருந்து சுமார் 65 கி.மீ. தூரத்தில் இருக்கும் சிறுகிராமம் பிதா. நவம்பர் 24 - நாடாளுமன்ற தேர்தல் நாளன்றுதான் இந்த அக்கிரமம் நடந்தது.

100க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட கூலி ஏழைகளை அக்கிராமத்தின் ராஜ்புத்திர மேல்சாதி நிலப்பிரபுக்கள் குரூரமாக கொன்றனர். அவர்களின் குடிசையில் புகுந்து கழனி வெளிகளில் துரத்திச் சென்று வெட்டிக் கொன்றனர்.

'தாழ்த்தப்பட்ட' குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், இளைஞர்களை துண்டு துண்டாக வெட்டி கால்வாயில், குப்பை மேடுகளில், கழனிகளில், தெருக்களில் வீசியெறிந்தனர். தலையை உயிரோடு அறுத்தெடுத்து உருட்டி விளையாடினார்கள். கழுத்திலிருந்து உயிர்நிலை வரை விறகுபோல பிளந்தனர். பெண்களின் மார்பகத்தை அறுத்தெறிந்து ரசித்தனர். குழந்தைகளை கழுத்தை முறித்துப் போட்டனர். படுகொலை புரிந்த மகிழ்ச்சியில் காட்டுமிராண்டிகள் போன்று நடனமாடினர்.

பலநூறு போலீசு மத்தியில், அதிகாரிகள் மத்தியில், நீதிபதி முன்னிலையில் இந்த அக்கிரமம் நடந்தது. இவ்வளவு பேர்கள் அங்கு இருந்தும் இப்படுகொலை பல நாட்கள் வெளியுலகுக்குத் தெரியவில்லை. காரணம்? அப்படியேதும் இருக்கவேண்டும்



படிப்பகம்

www.padippakam.com



# னநாயகம்

என்று விதியேதும் இருக்கிறதா என்ன!? இருந்தாலும் இதற்கு ஒரு காரணத்தை சொன்னார்கள்! இப்படுகொலைகள் நடந்த அதேநாள் காலை நவம்பர் 24ந் தேதி, நாடாளுமன்ற தேர்தல் நாளன்று. இந்திய மக்கள் முன்னணியைச் சேர்ந்த துப்பாக்கி ஏந்திய இளைஞர்கள் 5 ராஜபுத்திரர்களைக் கொன்று போட்டுவிட்டு மறைந்து விட்டார்கள் அதற்கு பழிவாங்கவே இந்தப் படுகொலை என்கிறார்கள்.

இப்படிச் சொல்வது ராஜபுத்திர வெறியர்கள் அல்ல; போலீசுக்காரர்கள்! ராஜபுத்திர மேல்சாதி வெறியர்களை முன்தள்ளி போலீசுக்காரர்கள்தான் இப்படுகொலைகளை முன்னின்று நடத்தினார்கள். 5 ராஜபுத்திரர்கள் கொல்லப்பட்ட அன்றே, மாவட்ட மாஜிஸ்ட்ரேட் இப்ராகிம் மற்றும் போலீசு சூப்பிரண்டு, எஸ்.எஸ்.பாண்டே தலைமையில், சிவில் மற்றும் போலீசு உயரதிகார பெரும் கும்பல், சிலமணி நேரத்தில் பிதா கிராமத்தை முற்றுகையிட்டது.



படுகொலைகளுக்குப் பிறகு பிதா கிராமம்.

அவர்களுடன், எல்லைப்புற பர்துகாப்புப்படை உட்பட எட்டு குழுக்கள் அடங்கிய ஆயுதம் ஏந்திய போலீசு - ராணுவம் அக்கிராமத்தில் குவிக்கப்பட்டது.

ஆனால், 24ந் தேதி மாலை தாழ்த்தப்பட்டவர்களின் மீது தங்கள் கண்ணெதிரில் நடந்த படுகொலையை இவர்கள் தங்கள் தலைமை இடங்களுக்கு தெரிவிக்கவே இல்லை. ஆனால் அதற்கு மாறாக, நடக்காத ஒன்றை நடந்ததாக, நவம்பர் 25ந் தேதி 'நக்சலைட்டுகள்' (இந்திய மக்கள் முன்னணி அமைப்பினர்) மீண்டும் ராஜபுத்திரர்களைத் தாக்கியதாக தவறான தகவலை தலைமை இடங்களுக்கு அனுப்பி இருக்கின்றனர்.

இந்தப் படுகொலைகளுக்கு காரணமான எந்த ஒரு ராஜபுததிர நிலப்பிரபுவையும் இதுநாள் வரை கைது செய்யவில்லை. ராஜபுத்திரர்களை கொன்றதாக 22 இந்திய மக்கள் முன்னணியினரை மட்டும் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது

மேல்சாதி நிலப்பிரபுக்கள் தாழ்த்தப்பட்ட கூலி ஏழைகளை திரள்திரளாக படுகொலை செய்வது புதிய செய்தி அல்ல. இந்த அக்கிரமங்களுக்கு எதிராக, குறிப்பாக, ரோட்டா, கயா, ஜகநாபாத், அவுரங்கபாத், நாலந்தா, போஜ்பூர் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட கூலி ஏழைகளை பெருமளவில் திரட்டி கடந்த 15 ஆண்டு காலமாக போராடி வருகிறது, இந்திய மக்கள் முன்னணி என்ற அமைப்பு.

கடநத ஆண்டு மார்ச்சு மாதம் 10ந் தேதி பாட்னா நகரில் இவ்வமைப்பின் கீழ் 5 லட்சம் மக்கள் திரண்டனர். சட்டமன்ற, நாடாளுமன்ற பாதையை ஏற்றுக் கொண்டு, கிருத்துவ தன்னார்வக் குழுக்களுடன் இணைந்து இடது - வலது போலிக் கம்யூனிஸ்ட்டுகளுடன் கூட்டு வைத்துக் கொண்டு ஆயுத போராட்டத்தையும் தனது போராட்டப் பாதையாக ஏற்றுக்கொண்ட அமைப்பு இது.

இவ்வமைப்பு நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஆரா (இத்தொகுதியில் வெற்றியும் பெற்றது) உட்பட பல தொகுதிகளில் போட்டியிட மனுதாக்கல் செய்தது. தான் போட்டியிடாத பகுதிகளில் தேசிய முன்னணியை ஆதரிப்பது என்று முடிவெடுத்தது.

இவ்வளவு நாளும், தாழ்த்தப்பட்டவர்களை, மலைவாழ் மக்களை ஓட்டுச் சாவடிக்குள் விடாமல், தாங்களே அவ்வோட்டுக்களை குத்திய மேல்சாதி ராஜபுத்திர நிலப்பிரபுக்களுக்கு வெறி உச்சத்தை அடைந்தது. முன்னிலும் அதிகமாக போலீசு துணையுடன் ஏராளமாக சாராய கிடங்குகளை அமைத்துக் கொண்டு அடியாட்களுக்கு ஊற்றி தாழ்த்தப்பட்டவர்கள் மீது ஏவினர்.

பள்ளிகள் உட்பட பொது இடங்களிலும், அரசு பஞ்சாயத்து அலுவலகங்களிலும் சாராய ஊறல்களும், போலீசு முகாமும், ஒருசேர மாற்றி, மாற்றி தாழ்த்தப்பட்டவர்களை மிரட்டின. பல தாழ்த்தப்பட்ட பள்ளி மாணவிகள் போலீசுக்காரன்களால் கற்பழிக்கப்பட்டனர்.

நவம்பர் 24 அன்று ஓட்டுப்போட வந்த தாழ்த்தப்பட்டவர்களை மேல்சாதி இளைஞர்கள் வெறி கொண்டு துப்பாக்கியால் சுட்டு விரட்டினர். ஓட்டுச் சாவடிக்குள் புகுந்து ஓட்டுச் சீட்டுக்களை கிழித்தெறிந்தனர். போலீசுக்காரன்கள் எதிரிலேயே இவ்வளவும் நடந்தது. அதற்கு பதிலடிக் கொடுக்கும் முகமாக ஆயுதம் தரித்த இந்திய மக்கள் முன்னணியைச் சேர்ந்த தற்காப்புக் குழுவினர் எதிர்தாக்குதல் தொடுத்தனர்.

5 ராஜபுத்திர சாதியினர் அதே இடத்தில் இறந்தனர். பலர் குண்டு காயங்களுடன் தப்பியோடினர். நிலப்பிரபுத்துவ எஜமானர்களுக்கு ஆபத்து என்றவுடன் பறக்கும்படையாக வந்திறங்கிய அரசு எந்திரம், நிலப்பிரபுக்களுக்குத் துணைநின்று தாழ்த்தப்பட்டவர்களை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது. ஆளுங்கும்பல்கள் பீற்றிக் கொள்ளும் 'ஜனநாயக' நீரோட்டத்தில் ஒன்று கலக்க முன்சென்ற கூலி ஏழைகளை படுகொலை செய்து தனது ஜனநாயக முகமூடியை தானே பிய்த்தெறிந்து கொண்டது.

பச்சையப்பன்

படிப்பகம்

www.padippakam.com



ரஷியாவின் புதிய ஜார்களிடமிருந்து பிரிந்து போகும் உரிமைக்கான போராட்டத்தில் ஆயுதமேந்தி நிற்கும் அஜர்பெய்ஜான் போராட்டக்காரர்கள்.

# போலிக் கம்யூனிஸ்டுகளின் அரசியல் மோசடி!



ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றி இதுநாள் வரை கருத்து ஏதும் கூறாமல் ஊமைக் கோட்டான்களாக இருந்த போலிக் கம்யூனிஸ்டுகள், இப்போது வாய் திறந்து சந்தர்ப்பவாத முத்துக்களைக் கொட்டுகின்றனர். இம்மாற்றங்கள் குறித்து கட்சித் தலைவர்கள் - அணிகளிடையே குழப்பம் ஏற்பட்டு ஆளுக்கொரு வியாக்கியானத்தை அவிழ்த்து விட்டதாலும், பரிகாசம் செய்யும் முதலாளித்துவப் பத்திரிகைகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டதாலும் போலிக் கம்யூனிஸ்டுகள் தத்தமது தலைமைக் கமிட்டிகளைக் கூட்டி தீர்மானங்களை வெளியிட்டுள்ளனர்.

''கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் உலக சோசலிசத்துக்கு பெரும் பின்னடைவையும் எதிர்ப்புரட்சி சக்திகளின் தாக்குதலுக்கும் வழியமைத்துள்ளது. சோசலிசத்தை கட்டியமைப்பதிலும், சோசலிச அரசின் செயல்பாட்டிலும் மார்க்சிய - லெனினியத்தில் இருந்து இந்நாடுகள் விலகிச் சென்றன. சோசலிச ஜனநாயகத்தை மறுத்து அதிகாரத்துவ போக்கை மேற்கொண்டு அணிகளிடமும் மக்களிடமும் கட்சித் தலைமை தனிமைப் பட்டு போனது. சோசலிசப் பொருளாதார அடிப்படைக் கோட்பாடுகளைச் சிதைத்து அதிலிருந்து விலகிச் சென்றதால் இந்நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் முற்றின. மக்களை கம்யூனிச உணர்வில் பயிற்றுவிக்கத் தவறியதால், எதிர்ப்புரட்சி சக்திகள் பலமடைந்தன ஏகாதிபத்தியத்தால் ஊக்குவிக்கப்படும் இச்சக்திகள், இந்நாடுகளில் மீண்டும் முதலாளித்துவத்தை நிறுவ சதி செய்கின்றன. கிழக்கு ஐரோப்பிய மக்கள் இதை நிச்சயம் முறியடிப்பார்கள். இது கம்யூனிசத்துக்கு ஏற்பட்ட தோல்வி அல்ல. சோசலிசத்தில் இருந்து விலகிச் சென்றதாலும், உரிய நேரத்தில் அதைச் சீர்செய்யாததாலுமே இந்த நிகழ்ச்சிகள் நடந்துள்ளன'' என்று 'இடது' கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ தீர்மானம் கூறுகிறது.

வலது கம்யூனிஸ்டுகளும் இதேபாணியில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர். ''ருமேனியாவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிப் போக்கு குறித்து இ.க.க. அதிர்ச்சியும் வேதனையும் கொள்கிறது. ருமேனியாவில் மீண்டும் முதலாளித்துவத்தை ஏற்படுத்த உள்நாட்டில் இருந்தோ, வெளிநாட்டில் இருந்தோ முயற்சி மேற்கொள்ளப்பட்டால் ருமேனிய மக்கள் அதை முறியடிப்பார்கள் என்று இ.க.க. நம்புகிறது. ஒடுக்குமுறையை எதிர்த்து ஜனநாகத்துக்காகப் போராடிய ருமேனிய மக்களை இ.க.க. பாராட்டுகிறது. ருமேனிய முன்னாள் அதிபர் சௌசெஸ்கூ குடும்ப ஆட்சி உண்மையான சோசலிச அரசாங்கத்திற்கு நேர் எதிரான கொள்கைகளைக் கொண்டதாக இருந்தது. அது ஜனநாயகத்தை முழுமொத்தமாக நசுக்கியுள்ளது. முறைப்படுத்தப்பட்ட ஊழல்கள் மூலம் நாட்டின் சொத்தை அது சூறையாடியுள்ளது. இச்செயல்கள் மனித நேயம் மற்றும் சோசலிச ஜனநாயகக் கோட்பாடுகளுக்குச் சிறிதும் சம்பந்தமற்றவை ஆகும்'' என்று வலதுகளின் தேசிய கவுன்சிலின் தீர்மானம் கூறுகிறது.

நேற்றுவரை கிழக்கு ஐரோப்பிய நாடுகளை ''சோசலிச நாடுகள்'' என்றும், சௌசெஸ்கூவை ''சோசலிச சிற்பி'' என்றும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய இப்போலிகள் இப்போது, சோசலிசத்திலிருந்து விலகிச் சென்றதால் இந்நாடுகளில் கொந்தளிப்பு ஏற்பட்டதாக திடீரென தமது நிலைப்பாட்டை சந்தர்ப்பவாதமாக மாற்றிக் கொள்கின்றனர். நீண்டகாலத்திற்கு முன்னரே இந்நாடுகள் சோசலிசத்திலிருந்து விலகிச் சென்றதாக இப்போது கூறும் போலிகள், இதற்குமுன் எங்கேயாவது எப்போதாவது குறிப்பிட்டதுண்டா? கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கேடுகெட்ட ஆட்சியாளர்களைப் பற்றி எப்போதாவது விமர்சித்ததுண்டா? இல்லவே இல்லை.

ருமேனியாவில் சௌசெஸ்கூ தூக்கியெறியப்படும் வரை அவரை சோசலிச சிற்பியாகவும், ருமேனியாவை சோசலிச நாடாகவும் வானளாவப் புகழ்ந்தனர். ருமேனியாவில் ஆட்சிக்கவிழ்ப்பு நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் நடந்த ருமேனிய கட்சி மாநாட்டிற்குப் பிரதிநிதியாகச் சென்ற வலது கம்யூனிஸ்ட் கட்சி மத்திய நிர்வாகக்குழு உறுப்பினரும் 'நியூ ஏஜ்'' இதழின் ஆசிரியருமான பராக்கல், ''ருமேனியா தொழில் மற்றும் விவசாயத் துறையில் மாபெரும் முன்னேற்றத்தைச் சாதித்துள்ளது'' என்று குறிப்பிட்டார். இதே மாநாட்டிற்குப் பிரதிநிதியாகச் சென்ற 'இடது' கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரான சீதாராம் யேசூரி, ''பொருளாதாரத் துறையில் கண்கூடாகத் தெரியுமளவுக்கு மாபெரும் பாய்ச்சல் நடந்து உள்ளது'' என்றார்.

வலது கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளரான ராஜேஸ்வரராவ் ''தோழர் சௌசெஸ்கூ தலைமையின் கீழ் ருமேனியாவில் சோசலிச கட்டுமானம் செழிப்பாக வளர்ந்துள்ளது'' என்று வாழ்த்து தெரிவித்து ''நியூ ஏஜ்'' இதழில் கட்டுரை எழுதினார். அதே போல சீதாராம் யேசூரியும், ''ருமேனியாவில் சோசலிச ஜனநாயகம் புரட்சிகரமான முறையில் நிலவுகிறது'' என்று பீப்பிள்ஸ் டெமாகிரசி என்ற தமது கட்சிப் பத்திரிக்கையில் கட்டுரை எழுதினார்.

இப்போது எல்லாவற்றையும் வசதியாக மூடி மறைத்துவிட்டு, சௌசெஸ்கூவின் கேடுகெட்ட ஆட்சியை சாடுவதோடு, தமக்கு இதுவெல்லாம் முன்பே தெரியும் என்று இப்போது கூசாமல் புளுகுகின்றனர். ''துவக்கத்தில் இருந்தே நாங்கள் பல்வேறு பிரச்சினைகளில் ருமேனிய கட்சியுடன்



படிப்பகம்

www.padippakam.com

'உடன்படவில்லை'' என்கிறார் 'இடது' கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் சுர்ஜித். ''ருமேனிய கட்சி மற்றும் ஆட்சியின் தவறுகள் பற்றி எங்களுக்கு முன்பே தெரியும். குறைபாடுகள் தெரிந்தாலும் அது ருமேனிய கட்சியின் உள்விவகாரம். வெளியில் இருந்து நாம் அதை திருத்த முடியாது. இதிலிருந்து நாம் படிப்பினைகளைத்தான் பெறமுடியும்'' என்கிறார் வலதுகளின் செயலாளர் பரூக்கி.

சோசலிசத்தில் இருந்து விலகிச் சென்ற இத்தவறுகள் ருமேனிய கட்சியின் உள்விவகாரமாகவே இருக்கட்டும். ஆனால் அக்கட்சியின் - ஆட்சியின் தவறுகள் பற்றி இவர்கள் எங்கேயாவது குறிப்பிட்டதுண்டா? அதிலிருந்து படிப்பினைகள் பெற்றதைப் பற்றி தமதுகட்சி அணிகளிடமாவது எப்போதாவது கூறியதுண்டா?

ரஷியா, சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளைப் பற்றியும், ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பற்றியும் நீண்டகாலத்துக்கு முன்னரே கம்யூனிசப் புரட்சியாளர்கள் பருண்மையாக ஆய்வு செய்து அம்பலப்படுத்தி வந்தனர். ஆனால் அப்போதெல்லாம் ''அதெல்லாம் பொய்; இவர்கள் ஏகாதிபத்திய ஏஜெண்டுகள்; நமது கட்சித் தலைவர்கள் அந்த நாடுகளுக்கு நேரில் போய் பார்த்துவிட்டு வந்துள்ளனர். இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?'' என்று அப்போலி சோசலிச நாடுகளுக்கு நற்சான்றிதழ் கொடுத்து தமது அணிகளையும் மக்களையும் இப்போலிகள் ஏய்த்து வந்தனர்.

இப்போது திடீரென முந்தைய ஆட்சியாளர்கள் சோசலிசப் பாதையில் இருந்து விலகிச் சென்றதாகக் குற்றம்சாட்டி, கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கின்றனர். இதுநாள்வரை முந்தைய போலி சோசலிச ஆட்சியாளர்களையும் ஆட்சியையும் நியாயப்படுத்தியது தவறு என்று பொறுப்பேற்கும் நேர்மை கூட அவர்களிடம் அறவே இல்லை. இப்படிச் செய்வது மக்களையும் அணிகளையும்



அஜர்பெய்ஜான் போராட்டத்தை ஒடுக்க எல்லையில் ஏவுகணைகளைக் குவிக்கும் ரஷிய ராணுவம். இதுவும் சோசலிசம் என்பதுதான் போலிகளின் நிலைப்பாடு.

## சந்தர்ப்பவாத கண்ணோட்டம்

*இரு பெரும் போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து வேறுபட்டதாக காட்டிக் கொள்ளும் பல உதிரி போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளன. அவற்றில் ஒன்று எம்.சி.பி.ஐ. (MCPI) எனப்படும் இந்திய மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி. இக்கட்சியும் கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் பற்றி ''கண்ணோட்டம்'' என்ற தனது கட்சிப் பத்திரிக்கையில் (ஜன.'90) எழுதியுள்ளது.*

*''சோசலிச மற்றும் மக்கள் ஜனநாயக நாடுகளில் ஏற்பட்ட அனுபவங்களை வைத்துப் பார்த்தால், பாட்டாளி வர்க்க சர்வாதிகார கோட்பாடு தனிநபர்கள் எதேச்சதிகாரமாக நடந்து கொள்வதற்கு, ஜனநாயகத்தை மறுப்பதற்கு, லஞ்சஊழலை மறைப்பதற்கு ஒரு வகையில் பயன்படுத்தப்பட்டு உள்ளது. தவறாக கையாளப்பட்டுள்ளது.*

*கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களின் தவறுகளால் பாதிக்கப்பட்ட கிழக்கு ஐரோப்பிய மக்கள் கரைபுரண்ட வெள்ளம் போல் காட்சித் தருகிறார்கள். அவர்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் தங்களது வர்க்கக் கட்சியை (அதன் பெயர் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும்) உருவாக்கிக் கொள்வார்கள். தவறுகளைக் களைந்து கொண்டு உலகிற்கு சில பாடங்களை வழங்கும் முறையில் இந்நாடுகள் செல்லும் என நம்பலாம்.*

*கோர்ப்பசேவின் கிளாஸ்நாஸ்ட் கொள்கை தவறு அல்ல; அது இன்னும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்; முழுமைப் படுத்தப்பட வேண்டும்.*

*ஒருக்கால் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோசலிசப் பாதையிலிருந்து திரும்பி முதலாளித்துவப் பாதையில் செல்லலாம்; என்றாலும் இது சோசலிசப் பயணம் நின்றுவிட்டதாகப் பொருளல்ல'' என்று கலவைவாத சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளையே இக்குட்டி முதலாளித்துவக் கட்சி எடுத்துள்ளது.*

*தவறுகள் ஏற்பட்ட என்ன காரணம் என்பதை அரசியல் பொருளாதார ரீதியில் ஆய்வு எதுவும் செய்யாமல் ஆட்சியாளர்களின் குறைகளாக சித்தரித்து இப்போலிக் கம்யூனிஸ்ட் கட்சியும் விவகாரத்திலிருந்து நழுவிக் கொள்கிறது. இப்போது நடக்கும் மாற்றங்கள் முதலாளித்துவ மீட்சிக்கானதா இல்லையா என்று கறாராக கூறாமல், தவறுகளைத் திருத்துவதற்கான போராட்டம் என்றும், ஒருவேளை முதலாளித்துவப் பாதையிலும் போகலாம் என்றும் வீரிய ஒட்டுரக சந்தர்ப்பவாத நிலை எடுத்துள்ளது. ''இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிக்க தடை இருந்திருந்தால் ருமேனியாவில் சர்வாதிகாரி செளசெஸ்கூ உருவாகி இருக்கமுடியாது'' என்று கோமாளித்தனமான தீர்வுகளையும் முன்வைத்துள்ளது.*

*'சி.பி.எம். கட்சியினர் கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களை அப்படியே ஆதரிக்கின்றனர். ஆனால் ரணதிவே எதிர்க்கிறார். நக்சல்பாரிகளோ இந்நாடுகளில் முதலாளித்துவம் முன்னரே தோன்றிவிட்டதாகக் கூறுகின்றனர். எல்லாமே தவறு. எம்வழியே சரியான வழி' என்பதாக இக்குட்டி முதலாளிகள் பீற்றிக் கொள்கின்றனர்.*



படிப்பகம்

www.padippakam.com

இளிச்சவாயர்களாகக் கருதி அவமானப்படுத்துவதாகும் என்ற குற்ற உணர்வு கூட அவர்களிடம் இல்லை.

இப்போது கூட கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் பற்றி என்ன சொல்கிறார்கள்? சோசலிசப் பாதையில் இருந்து விலகிய 'தால் இந்த நிலைமை ஏற்பட்டது' என்கிறார்களே தவிர, அப்போலி சோசலிசத்தின் அரசியல், பொருளாதார, சமூக அடிப்படைகளைப் பற்றி வாயே திறப்பதில்லை. இப்போது நடந்துவரும் மாற்றங்கள், தவறுகளை சரி செய்வதற்கானதா? அல்லது முதலாளித்துவ பாதைக்கானதா என்று கறாராக எதுவுமே கூறாமல், எல்லாமே சோசலிசம் என்று மழுப்புகிறார்கள். இத்தவறுகள் எதனால் ஏற்பட்டன? யார் காலத்தில் நடந்தன? இதற்கு யார் பொறுப்பு என்று தீர்க்கமான எந்த முடிவுமின்றி வழக்கம் போலவே சந்தர்ப்பவாதமாக முடிவுகள் எடுத்து அணிகளை ஏய்க்கின்றனர்.

'சில கிழக்கு ஐரோப்பிய நாட்டுத் தலைவர்கள் ஜனநாயகத்தை மறுத்து சர்வாதிகாரமாக நடந்துள்ளனர். மக்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் பொருளாதாரத்தை சிதைத்து விட்டார்கள்; மக்களுக்கு கம்யூனிச போதனை அளிக்கத் தவறிவிட்டனர்' என்று அளவு ரீதியாக சில தவறுகள் நடந்துள்ளதாக கூறுகிறார்களே தவிர, தன்மையில் அவை போலி சோசலிசமாக, அதிகாரவர்க்க ஆட்சியாகச் சீரழிந்ததைப் பற்றி எங்கேயும் குறிப்பிடுவதில்லை. இவற்றை எல்லாம் சரிசெய்துவிட முடியும் என்று வேறு நம்பச் சொல்கிறார்கள்.

ஏகாதிபத்தியத்தால் தூண்டிவிடப்படும் சில சீர்குலைவு சக்திகள் முதலாளித்துவத்தை மீட்க முயல்வதாகவும், புரட்சிப் பாரம்பரியமிக்க அந்நாட்டு மக்கள் அதை முறியடிப்பார்கள் என்றும் பொத்தாம் பொதுவாக ஆறுதல் கூறுகின்றனர். ஆனால் அவர்களால் குறிப்பிடப்படும் ''சில சக்திகள்'' தான் இன்று அந்நாடுகளை ஆட்டிப் படைக்கும் தீர்மானகரமான சக்தியாக உள்ளன. அற்ப சீர்த்திருத்தங்கள் அல்ல; அப்பட்டமான முதலாளித்துவம் தான் வேண்டும் அச்சக்திகள் அடுத்தடுத்து ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்துகின்றன. அதன் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின் தங்குபவர்களைத் தூக்கி எறியுமளவிற்கு கிழக்கு ஐரோப்பாவில் மக்களது போராட்டங்கள் தீவிரமாக நடக்கின்றன.

ஆனால் இதையும் சோசலிசம் என்று இப்போலிகள் துதிபாடுகின்றனர். ''சோசலிச வளர்ச்சிக் கட்டத்தில் முன்னேற்றம்'', ''புதிய சோசலிச சோதனை முயற்சிகள்,'' ''சோசலிசத்தின் வேறுபட்ட வடிவங்கள்'' என்று நியாயப்படுத்தவும் செய்கின்றனர். 'ஜனநாயகத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற பெயரில் அதிகாரத்துவப் போக்கை மேற்கொள்ளக்கூடாது' என்று இப்போது தாம் ஏதோ புதிதாக கண்டுபிடித்து விட்டதைப் போல கதைக்கின்றனர். இது 30 ஆண்டுகளுக்கு முன்னர் ரஷியாவில் முதலாளித்துவ மீட்சியைத் துவக்கி வைத்து, ''பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமே கூடாது'' என்று வாதிட்ட குருச்சேவின் கொள்கை தான். அதையே இப்போது தமது மூடி மறைக்கப்பட்ட சந்தர்ப்பவாத மொழியில் கக்குகின்றனர்.

தூக்கியெறியப்பட்ட கிழக்கு ஐரோப்பிய ஆட்சியாளர்களை ஸ்டாலினிச சர்வாதிகாரிகளாக கொச்சைப்படுத்தி வலதுகள் சாடுகின்றனர். 'இடது'களோ ஸ்டாலின் பற்றிய விமர்சனங்களை எதிர்க்கின்றனர். மற்றபடி 'இடது', வலது மற்றும் தூய வலதுகளான தா.பாண்டியன் கட்சிகளுக்கிடையே வேறுபாடு எதுவுமில்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால் 'இடது'களின் தீர்மானம் கூட ஏகமனதாக இல்லை. பசவப்புன்னையா, சுர்ஜித், நம்பூதிரிபாடு ஆகியோரது கோஷ்டி கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களை அப்படியே ஆதரித்து துதிபாடுகிறது. இடதுகளின் பொலிட்பீரோ உறுப்பினரும் சி.ஐ.டி.யு. தலைவருமான ரணதிவே கோஷ்டி இந்த மாற்றங்களை எதிர்த்து இன்னுமொரு சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை எடுத்துள்ளது. ''போலந்திலும், ஹங்கேரியிலும் எதிர்ப்புரட்சி வெற்றி பெற்றுள்ளது. போலந்தில் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை நிறுவுவதே தனது நோக்கம் என்று புதிய பிரதமர் பகிரங்கமாக அறிவிக்கிறார். ஹங்கேரியில் கம்யூனிஸ்ட் கட்சியை கலைத்துவிட முடிவு செய்துவிட்டார்கள். சோசலிசத்துக்கு எதிராக ஏகாதிபத்திய சக்திகள் பெற்றுள்ள மிகப் பெரிய வெற்றி இது'' என்று ரணதிவே குற்றம் சாட்டுகிறார். (தீக்கதிர், டிசம்.30) ஆனால் இதற்கு மாற்றாக அவர் முன்வைக்கும் தீர்வு பாட்டாளி வர்க்க சோசலிசமல்ல! சீனாவில் இத்தகைய எதிர்ப்புரட்சி சக்திகள் முறியடிக்கப்பட்டதை பெருமையுடன் குறிப்பிட்டு, சீனப் பாணியிலான அதிகார வர்க்க ஆட்சி முறையைக் கொண்ட போலி சோசலிசத்தைத்தான் அவர் ஆதரிக்கிறார்.

இவ்விரு சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளுக்குள் புகுந்து இன்னுமொரு சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை எடுத்துள்ளார் ஜோதிபாசு. ''ரஷியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மக்களின் சில அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. சில கிழக்கு ஐரோப்பிய தலைவாகள் சோசலிசத்தில் இருந்து விலகி முதலாளித்துவத்தை நிலை நாட்ட முயல்கிறார்கள். சீனாவும் ரஷியாவும் இத்தவறுகளைத் திருத்தி சோசலிசத்தை நிலைநாட்டி உள்ளன. கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களில் சில நல்ல அம்சங்களும் சில கெட்ட அம்சங்களும் உள்ளன'' என்று ஒரு 'நடுநிலை' சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை எடுத்துள்ளார்.

இப்படி ஆளுக்கொரு சந்தர்ப்பவாத நிலைப்பாடு எடுத்து போலி சோசலிசத்தை நியாயப்படுத்தி, அணிகளையும் மக்களையும் ஏமாற்றிவரும் இப்புரட்டல்வாத போலிக் கம்யூனிஸ்டுகளை, இக்கட்சிகளில் உள்ள புரட்சிகர அணிகள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். இத்துரோகத் தலைமைக்கு எதிராக கலகம் செய்து புரட்சிகர இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு, அதன்மூலம் மார்க்சிய - லெனினியத்தைப் பற்றிப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லும் மகத்தான பணிக்கு தோள் கொடுக்க முன்வர வேண்டும்.

■ பாலன்

## 'பொதுச்சேவை' ஊழியர்களின் பகற்கொள்ளை!

சிவா.இராசமாணிக்கம் தஞ்சை மன்னார்குடி நகராட்சி மன்றத் தலைவர். லஞ்சம் வாங்குபவர்களுக்கு கைதான் அரிப்பெடுக்கும் என்றால் இவருக்கு உடம்பெல்லாம் அரிப்பெடுக்கும்.

மன்னார்குடி நகராட்சி பொறுப்பில் உள்ள நீரேற்று நிலையங்களில் 18 ஊழியர்களை நியமித்து, ஒவ்வொருவரிடமும் 5000 ரூபாயிலிருந்து 7,000 வரை பிடுங்கிவிட்டார். இவருடைய 'பொதுச்சேவை'யில், அந்நகராட்சி மன்ற ஆணையரும் கூட்டு. தற்போது, நகராட்சி சுகாதார பிரிவின் கீழ் நியமனம் செய்யப்பட்ட 37 துப்புரவுத் தொழிலாளர்களிடம், மொத்தமாக ரூபாய் 1,80,000 ஐ கறந்து விட்டனர். இந்த 'பொதுச்சேவை' ஊழியர்கள்.

இன்னும் கொடுமை என்னவென்றால், பொங்கலுக்கு தமிழக அரசு அறிவித்த 'இனாம்' தொகையைக் கூட மேற்படி 18 ஊழியர்களுக்கு வழங்கவில்லை. இந்த 'பெரிய' மனிதர்கள். அந்த ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகவும், புதிதாக ஆட்களை வேலைக்கு எடுத்திருப்பதாகவும் கோப்புக்கள் தயாரித்துள்ளனர். 'இனாம்' பணத்தை எப்படி ஏப்பம் விடுவதென பல சட்டப்புத்தகங்களை குடைந்துக் கொண்டிருக்கின்றனர். அந்த அப்பாவித் தொழிலாளர்களோ, இவையெல்லாம் தெரிந்திருந்தும் ஏதும் செய்ய முடியாமல், 'புதிய' தினக்கூலியாக வேலை செய்கின்றனர்.

இந்த பெரிய மனிதர்களின், வலதுகரமாகவும், 'இடதுகரமாகவும், பொது சுகாதாரப் பிரிவின் தலைமை எழுத்தர் இந்திரஜித்தும், ஒத்தைத் தெரு மேல்நிலை நீரேற்று 'ஊழியர்' கோவிந்தராசும் செயல்படுகின்றனர்.

இந்த கும்பல் இன்னும் பல உதிரி வருமானத்திற்காக, மருந்து இல்லாத மருத்துவமனையைக் கூட பராமரிக்கிறது. குட்டைகரை சேணிய தெரு, மகப்பேறு மருத்துவநிலையம் என்ற விளம்பர பலகையை தவிர வேறெதும் இல்லாத ஒரு கட்டிடத்தில், இரண்டு உதவியாளர்களை போட்டு மாதம் 3,000 ரூபாய் சம்பளம் கொடுக்கின்றனர். இன்னும் அம்மருத்துவமனை செலவாக என்னென்ன கணக்குகள் எழுதப்படுகின்றன என்பது, அந்தச் 'சிவனு'க்கே வெளிச்சம்!

பொதுசுகாதாரத்தை பேணுவதற்கு முன் பெரிய மனிதர்கள் போர்வையில் உலவும் இந்த கிரிமிகளை முதலில் பூண்டோடு ஒழிக்க வேண்டும். இல்லையானால் மன்னார்குடி நகரமே நாற ஆரம்பித்துவிடும்.

தகவல்:
வழிப்போக்கன், மன்னார்குடி. ●



படிப்பகம்

www.padippakam.com




கவர்ச்சித் திட்டங்களை வீசிவிட்டு ஓட்டுக்களை பொறுக்கிக் கொள்ளும், பிழைப்புவாத அ.தி.மு.க; தி.மு.க., கட்சிகளின் ஆட்சியினால், மக்களின் நல்வாழ்வுக்கான அடிப்படைத் திட்டங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதை, அரசின் சி.ஏ.ஜி. அறிக்கை சமீபத்தில் அம்பலப்படுத்தி உள்ளது.

அரசு நிர்வாகங்களின் உயர் தணிக்கை (Comptroller and Auditor General (AG) மார்ச்சு '88ஆம் ஆண்டு அறிக்கையை தற்போது அரசிடம் சமர்ப்பித்துள்ளது. அதில் பெண்கள், குழந்தைகள் நலம். ஊட்டச்சத்து, நோய்த்தடுப்பு, குழந்தைகள் மேம்பாடு மற்றும் சிறைநிர்வாகம் இப்படி மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்கள் பலவும் நீண்டகாலமாக முடக்கப்பட்டுள்ளதை அம்பலப்படுத்துகிறது.

'75ம் ஆண்டிலிருந்து துவங்கப்பட்ட இத்திட்டங்கள் பலவும் நடைமுறைப்படுத்தப்படுவதாக வெறும் ஏட்டளவில் மட்டுமே கணக்கு காணபிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டங்கள் ஒன்று கூட தனது குறைந்தப்பட்ச இலக்கைக் கூட எட்டவில்லை. ஒதுக்கப்பட்ட தொகை பெரும்பாலான திட்டங்களுக்குச் செலவழிக்கப்படவே இல்லை.

**நோய்த் தடுப்பு:** நோய்த்தடுப்பு திட்டத்தின் கீழ்வரும் 67 சதவிகித கர்ப்பிணி பெண்களுக்கு 'டெட்டனஸ்' நோய்க்கு எதிராக தடுப்பு மருத்துவம் அளிக்கப்படவில்லை. 84-87ம் ஆண்டுகளில் இவர்களின் குழந்தைகளுக்கு போலியோ நோய்களுக்கு எதிரான தடுப்பு ஊசி போடப்படவில்லை.

இத்திட்டம் '84-'87 ஆண்டுகளில் முந்தைய ஆண்டுகளின் இலக்கைக் விட் 6லிருந்து 96 சதவிகிதம் வெட்டப்பட்டுள்ளது. கண் பார்வை இழப்பை தடுக்க குழந்தைகளுக்கு வழங்கப்படும் 'ஏ' விட்டமின் மாத்திரைகள் வழங்கும் திட்டமும் 43லிருந்து 80 சதவிகிதம் வெட்டப்பட்டுள்ளது. கர்ப்பிணிகளுக்கு இரும்புசத்து மாத்திரைகள் வழங்குவது 94 சதவிகிதம் குறைந்து விட்டது.

இன்னும் இரத்த அழுத்தத்தை கண்டறியும் கருவி, எடை இயந்திரம் முதலானவை நகர்ப்புற சுகாதார மருத்துவமனைகளுக்குக் கூட வழங்கப்படவில்லை. 'வெக்சீன்', 'போலியோ' மருந்து முதலியவற்றைப் பாதுகாத்து வைக்கும் குளிர்ப்பதனப் பெட்டி உபயோகப்படுத்தப் படுவது இல்லை. மின் இணைப்பு இல்லை என்ற காரணம் சொல்லப்படுகிறது. ஓட்டுநர் இல்லாமல் பயன்படுத்தப்படாமல் கிடக்கும் ஜீப்புகள், குடிநீர், கழிப்பிட வசதி இல்லாத நிலையங்கள் என்று நிலைகுலைந்து கிடக்கின்றன.

**ஊட்டச்சத்து:** பல்வேறு 7 வகைப்பட்ட திட்டங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ஊட்டச்சத்து திட்டங்கள் '86-'88ம் ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ்வரும் 18லிருந்து 21 சதவிகிதம் பெண்களுக்கு போய் சேரவேயில்லை. 1999 குழந்தைகளையும் இப்படி ஏமாற்றி இருக்கிறார்கள்.

இத்திட்டங்கள் ஆண்டுக்கு 300 நாட்களுக்கு தொர்ந்து அமுல்படுத்த வேண்டும் என்பதும் கடைபிடிக்கப்படவில்லை. 3 மாதங்கள் வெட்டப்பட்டு உள்ளன. இத்திட்டங்களில் ஊட்டச்சத்து சதவிகிதம் சிபாரிசு அளவைவிட தொடர்ந்து குறைந்து வருகிறது. நோய் எதிர்ப்பு உணவுகள் குழந்தைகளுக்கு வழங்கப்படவே இல்லை. 86-88ஆம் ஆண்டில் மத்திய அரசின் கோதுமை சார்ந்த ஊட்டச்சத்து திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபாய் 164 லட்சத்தில் 113 லட்சம்தான் உபயோகப்படுத்தப்பட்டு உள்ளது.

**மலைவாழ் மக்கள் மேம்பாடு:** இதற்காக 253 லட்சம் ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்ட பால்வள நிறுவனங்கள் 29லிருந்து 53 சதவிகிதம் அளவே திறனோடு இயங்குகின்றன. அந்நிறுவனங்களின் திட்டத்தின் கீழ் வரும் பால்கொடுக்கும் கால்நடைகளும், அவை கொடுக்கும் பாலின் அளவும் தொடர்ந்து குறைகின்றன. இதற்காக மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட 254 லட்சம் ரூபாய் முறைகேடாக, நீலகிரி மாவட்ட ஏஜென்ஸியிடம் முடங்கி கிடக்கிறது.

பருவகால தொழிற்பயிற்சி கூடங்களுக்கு ஒதுக்கப்பட்ட 14.5 லட்சம் ரூபாய் சரியான முறையில் உபயோகப் படுத்தப்படவில்லை. 12 நிறுவனங்களுக்கு தேவையில்லாமல் 5 லட்சம் ரூபாய் மீண்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் கீழ் வராதோருக்கு செலவழிக்கப்பட்டதாக கணக்குக் காட்டி 3 லட்சம் வீணடிக்கப்பட்டிருக்கிறது.

**பெண்களின் பொருளாதார சுயசார்பு:** பெண்களின் முன்னேற்றம் மேம்பாடு இவற்றுக்கான திட்டங்கள் கேட்பாரற்று கிடக்கிறது. தமிழ்நாடு சமூகநல மேம்பாட்டுக் கழகம், சமூகநலத் துறை, மாவட்ட மேம்பாடு ஏஜென்சி என்று ஏராளமான நிறுவனங்கள் இருந்தும் குறைவான இலக்கைக் கூட எட்டவில்லை.

84-87 மார்ச்சு வரை அதன் 41.2 சதவிகித தொகை தொடர்ந்து வங்கியில் முடங்கிக் கிடக்கிறது. பயனுள்ள நீண்டகால திட்டங்கள் எதையும் அறிமுகப்படுத்தவில்லை. ஒரு சிறு கல்விக்கூடம், இரண்டு அச்சுக் கூடம் என்று பெயருக்கு இயங்குகிறது. வெளிநாட்டில் வேலை வாங்கித் தர உதவுவது என்று இயங்காத திட்டத்தில் 8 லட்சம் ரூபாய் நட்டம் எழுதியுள்ளது.

சாதாரண மக்களுக்கு அரசு நிர்வாகம் பற்றியோ, அரசாங்க திட்டங்களின் செயல்பாடு பற்றியோ எதுவும் தெரியாது. பெரும்பாலான மக்களின் பிரதிநிதிகளுக்குக் கூட இது தெரியாது என்பதுதான் உண்மை. அதிகார வர்க்கம்தான் இதன் சூத்திரதாரியாகவும் செயல்படுத்தும் அதிகாரம் கொண்டதாகவும் இருக்கிறது. அரியணையில் ஏறும் ஓட்டுச் சீட்டுக் கட்சிகளின் கவர்ச்சி திட்டங்கள், சவடால்களுக்கு ஏற்ப, ஏற்கனவே இருக்கும் நிரந்தர திட்டங்களை கிடப்பில் போடுகின்றன. ஓட்டு சீட்டு கட்சிகளின் கவர்ச்சி திட்டங்களை ஊதிபெருக்கி, முறைகேடாக அரசு வருவாயை கூட்டுச் சேர்ந்து கொள்ளையடிக்கின்றன. ஒரே கல்லில் கொத்தாக மாங்காய் அடிப்பது போல், நிரந்தரமான திட்டங்கள், கவர்ச்சி திட்டங்கள் என்று இரண்டிலும் சுருட்டுகின்றனர். நிரந்தர திட்டங்களை உருவிவிட்டு பாமர மக்களை கவர்ச்சித் திட்டங்கள் மூலம், அயோக்கியத்தன முறையில் ஏமாற்றுகின்றன, தமிழனை தலைநிமிரவைக்கவந்த திராவிட கட்சிகள்!

● குணசேகரன்

படிப்பகம்

www.padippakam.com

## ராஜா வி.பி.சிங் அறிமுகப்படுத்தும்

# அதிகார வர்க்க புதுமுகங்கள்!

பத்திரிக்கைகளை, குறிப்பாக ஆங்கிலப் பத்திரிக்கைகளைப் புரட்டினால் அடையாளம் தெரியாத பல புதிய மூஞ்சிகள். ஓட்டுக்கட்சிகளின் தலைவர்கள் - பிரமுகர்கள்; சினிமா, விளம்பர நடிகர் - நடிகைகள்; விளையாட்டு வீரர்கள் - வீராங்கனைகள் - இப்படித்தான் இதுவரை அதிகமாகப் பார்த்திருக்கிறோம். யார் இந்தப் புதுமுகங்கள்? இவர்கள்தான் புதுடெல்லியில் இருந்து கொண்டு நாடு முழுவதையும் ஆளவந்திருக்கும் புதிய ஆட்சியாளர்கள்! ஆனால் இவர்கள் தேர்தல்களில் வெற்றி பெற்றவர்களோ, தேசிய முன்னணி அரசின் மந்திரிகளோ அல்ல. அதன் சார்பாக நாட்டை நிர்வகிப்பதற்காக தெரிவு செய்து பொறுப்பேற்று இருப்பவர்கள். நேரான வழியிலே வருபவர்கள் இல்லை. புறக்கடை வழியாகவே நுழைந்து பதவிகளைக் கைப்பற்றிக் கொண்டு வரைமுறையற்ற அதிகாரத்தை ஏந்திச் சுழற்றும் அதிகார வர்க்கத்தினர்.

புதுடெல்லியிலே, இப்போது ஓர் அரண்மனைப் புரட்சியை — ஆட்சிக் கவிழ்ப்பை ஓசைப்படாமல் நடத்திக் கொண்டிருக்கிறார், ராஜா வி.பி.சிங். இந்திரா - ராஜீவ் கும்பலுக்கு விசுவாசமாக இருந்த கும்பல் களையெடுக்கப்படுகிறது. ராஜா வி.பி. சிங்கின் நான்கு சாதிக் கூட்டணிக்கு நம்பகமான தூண்கள் நடப்படுகின்றன. ஆனால் இதையே, இந்திரா - ராஜீவ் காலத்தில் ஏற்பட்டிருந்த நிர்வாகச் சீர்கேடுகள், குளறுபடிகளைச் சீரமைக்கும் பெரும்பணியில் வி.பி. சிங் ஈடுபட்டிருப்பதாக சித்தரிக்கிறார்கள்.

— 'பிரதமரின் அலுவலகம்' என்ற பெயரில் சட்டத்துக்குப் புறம்பான அதிகார மையமாக, அரசையும் கட்சியையும் ஆட்டிப் படைக்கும் அதிகாரத் தரகுக் கும்பலை இந்திரா — ராஜீவ் உருவாக்கி இருந்தனர். அது தகர்க்கப்படுகிறது.

— மொரார்ஜி, லால்பகதூர் ஆட்சிக்காலத்தில் இருந்ததைப் போல சட்டப்பூர்வமான நிர்வாக அமைப்பாகிய அமைச்சரவைச் செயலகத்திடம் மீண்டும் அதிகாரம், பொறுப்புகளை ஒப்படைத்து அதன் மதிப்பை நிலைநாட்டுகிறார்.

— எல்லா அமைச்சர்களுக்கும் புறம்பாக, நேரடியாக உத்திரவு போட்டு அமைச்சகங்களை 'பிரதமரின் அலுவலகம்' இயக்கி வந்தது. இப்போது மந்திரிகளின் சுய அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது.

— சுயநல, பதவி வெறிபிடித்த அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையே உருவாகியிருந்த கள்ளக்கூட்டை முறிக்கிறார்.

- திறமையும், நேர்மையும், பொறுப்பும் வாய்ந்த நிர்வாக அமைப்பை கட்டுவதற்கு வி.பி.சிங் முயலுகிறார்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு, பாசிச ராஜீவ், திருவாளர் பரிசுத்தமாகப் பதவிக்கு வந்த போதும் ஏறக்குறைய இதே மாதிரியான கருத்துப்பிரச்சாரம் நடந்தது, நினைவிருக்கிறதா? இந்திரா - சஞ்சய் உருவாக்கிய பாரம்பரியத்தில் இருந்து முறித்துக் கொண்டு புதிய திசையில் ராஜீவ் ஆட்சி நடப்பதாக நம்பிக்கையை விதைத்தார்கள்.

அது ஒருபுறம் இருக்கட்டும். இப்போது வி.பி.சிங் செய்து வரும் அதிகார வர்க்க மாற்றங்கள் எத்தகையவை? இவற்றால் அதிகார வர்க்கத்துக்கே உரிய பிறவிக் குணங்கள் மாறிவிடுமா? இந்தக் கேள்விகளைப் பரிசீலிப்போம்!

ராஜீவ் கும்பலின் விசுவாசமான உயர் அதிகாரிகளை வேட்டையாடுவது, பழி வாங்குவது, கையுங்களவுமாக பிடிபட்ட கூட்டுக்களவாணிகள், அதிகார முறைகேடர்களைத் தண்டிப்பது ஆகிய எதையும் வி.பி. சிங் மேற்கொள்ளவில்லை. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப் போல நோகாமல் மாற்றங்களைச் செய்கிறார், வி.பி.சிங்.

ராஜீவ் ஆட்சியின் மிக உயர்ந்த அதிகார பீடத்தில் இருந்த சிலருக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு, பதவிக்கால நீட்டிப்புக் கொடுத்து, ஆனால் நிர்வாக அதிகாரமில்லாத இடங்களுக்கு ஓரங்கட்டி வைத்தார். முந்தைய ஆட்சியின் மூளையாகக் கருதப்பட்ட நிதி இலாகா செயலாளர் கோபி அரோராவை, சர்வதேச நிதி நிறுவனத்தில் இந்திய நிர்வாக இயக்குனராக 16 லட்சம் ரூபாய் சம்பளம் பெறும் பதவி கொடுத்து அமெரிக்காவுக்கு அனுப்பிவிட்டார். ராஜீவின் அமைச்சரவைச் செயலாளராக இருந்த டி.என்.சேஷனுக்கு, மேலும் நான்காண்டு பதவிகால நீட்டிப்புக் கொடுத்து திட்டக்கமிஷன் உறுப்பினராகி விட்டார். ராஜீவின் பிரதானச் செயலாளராக இருந்த பி.ஜி.தேஷ்முக்கின் அதிகாரங்களைப் பறித்துக் கொண்டு பதவி நீட்டிப்பு செய்தார். ராஜீவ் கும்பலின் பிரச்சார பீரங்கிகளை இயக்கிய செய்தி ஒலி - ஒளிபரப்புச் செயலாளர் முராரி குடியரசுத் தலைவரின் செயலாளராகப் பல் பிடுங்கப்பட்டு பதவி உயர்வு பெற்றார்.

வி.பி.சிங்கின் கூட்டாளிகளுக்கு நேரடியான கேடுவிளைவித்த சில அதிகாரிகள் மட்டும் சொந்த மாநிலங்களுக்கோ, விடுப்பிலோ அனுப்பப்பட்டார்கள். வி.பி.சிங்குக்கு எதிராக ''தூயகிட்ஸ்'' தீவு வங்கி - முதலீட்டு ஊழல் புகாரைப் புனைந்த நிதித்துறை அதிகாரியான என்.கே.சென்குப்தா, அமிதாப்பச்சன் சாதிக்காரர்களான கே.எல். வர்மா, கிரிஷ்ண்காந்த். அம்பாணியின் எடுபிடியான எச்.கே.கான் ஆகியோர் இந்த வகையினர். வி.பி.சிங்கின் மருமகன் சஞ்சாய்சிங் மீது சையதுமோடி கொலை வழக்குப் போட்டது; அருண்நேரு மீது செக்.துப்பாக்கி ஊழல், அமெரிக்கப் பயண ஊழல் சுமத்தியது ஆகியவற்றிறுக்குக் காரணமான போலீசுத்துறை செயலாளர் கல்யாண கிருஷ்ணன், ஐ.பி.இயக்குநர் எம்.கே.நாராயணன், சி.பி.ஐ. இயக்குநர் அருண்முகர்ஜி போன்றவர்கள் விடுமுறையில் அனுப்பப்பட்டனர்.

அதிகார வர்க்கத்துக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் ராஜீவைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த 'பிரதமரின் அலுவலகம்' என்ற சட்ட விரோத மையத்திலிருந்து ஜி.பார்த்தசாரதி, ஆர்.கே.தவான், வி.ஜார்ஜ், மணிசங்கர் ஐயர், சுமன்துபே மற்றும் விஞ்ஞான, கல்வி - கலாச்சார ஆலோசகர்கள் போன்ற கும்பல் விரட்டப்பட்டுவிட்டது.

ராஜீவின் அதிகார வர்க்க சங்கிலித் தொடருக்குப் பதிலாக இரண்டு அதிகார வட்டங்களை வி.பி.சிங் உருவாக்கியுள்ளார். ராஜீவின் கீழ் வி.பி.சிங் நிதி மந்திரி

**உள்ளே...**

**ராஜாவின் ஆட்கள்**

**வினோத் பாண்டே; பூரேலால் சர்மா.**





படிப்பகம்

www.padippakam.com



ராஜாவுக்கும் விசுவாசி; ராஜீவுக்கும் விசுவாசி! பதவி நீட்டிப்பு பெறும் பி.ஜி. தேஷ்முக்.

யாக இருந்தபோது உத்திரப்பிரதேசத்தில் இருந்து பொறுக்கி எடுத்துவந்த வினோத் பாண்டே, பூரேலால் ஆகிய இரு அதிகாரிகள். ராஜீவ் - அம்பாணி - அமிதாப் கும்பலுக்கு எதிராக துப்பறியும் வேலை செய்ததற்காக ஃபார்ஃபாக்ஸ் விவகாரத்தைக் காட்டி அதிகாரமற்ற பதவிகளுக்குத் தள்ளப்பட்டிருந்தனர். இப்போது வினோத் பாண்டேயை அமைச்சரவைச் செயலாளராகவும், பூரேலாலை இணைச்செயலாளராகவும் நியமித்துள்ளார். இவர்களோடு வாஷிங்டனில் உலக வங்கி நிர்வாக இயக்குனநராக இருந்த பிமல்ஜலன் என்பவரை நிதிஇலாகா செயலாளராக்கியுள்ளார்.

வினோத் பாண்டே, பூரேலால், பிமல்ஜலன் என்ற அதிஉயர் அதிகாரம் படைத்த மூவர் குழு மற்ற அமைச்சகங்கள், உளவுத் துறை ஆகியவற்றுக்குத் தனது உறவினர்களையும், நம்பத்தகுந்த சகபாடிகளையும் பொறுக்கி எடுத்து நியமித்து வருகிறது. போலீசுத் துறை செயலாளராக சிரோமணி சர்மா, ஐ.பி.இயக்குநராக ஆர்.பி.ஜோஷி, சி.பி.ஐ. இயக்குநராக ராஜேந்திரசேகர் ஆகியோர் வந்துள்ளனர்.

இந்த வட்டத்தைத் தவிர ''சமயற்கட்டு அமைச்சரவை'' ஒன்றையும் அமைத்துக் கொள்ள வி.பி.சிங் தவறவில்லை. அரிபிரசாத் சர்மா, எஸ்.என்.சிங், குலாப் திவாரி, எஸ்.பி.சிங் ஆகிய நம்பகமான ஆட்களுடன் வி.பி.சிங் மனைவி சீதாதேவியையும் இணைத்துக் கொண்டு இது இயங்கும்.

குறிப்பிட்ட மாநிலத்தைச் சேர்ந்த, குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள், ''சீனியாரிட்டி''யை மீறி பதவி உயர்வு பெற்றுள்ளார்கள் என்று எதிர்த்தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர். குறிப்பாக அமைச்சரவை செயலாளராகியுள்ள வினோத்பாண்டே ஓய்வு பெற இரண்டே மாதங்கள்தாம் உள்ளன. 5 மூத்த அதிகாரிகளை ஒதுக்கிவிட்டு நியமிக்கப்பட்டுள்ளார்; அவரது உறவுக்காரர்களும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். இந்த வினோத் பாண்டே, பூரேலால், பிமல்ஜலான் உட்பட 80 சதவிகிதமான உயர்பதவிகளுக்கு வந்திருப்பவர்கள் உத்திரப்பிரதேச மாநிலத்தவர் (27 பேரைக் கொண்ட மந்திரி சபையில் 17 பேர் உ.பி.காரர்கள்) அதிலும் பெரும்பான்மையினர் உ.பி. பார்ப்பனர்கள். மற்றவர்களும் முஸ்லீம், அகிர், ஜாட், குஜ்ஜார், ராஜபுத்திரர் ஆகிய ஜனதாதள சாதிக் கூட்டணி அடிப்படையில் வந்தவர்கள்.

ஆனால் இதற்குமுன்பு ஆண்ட நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரை ஆட்சியும் இப்படித்தான் நடந்து கொண்டது. கௌல், நேரு, ஹக்சர், தர், ஜா ஆகிய காஷ்மீரி பார்ப்பனர்களைப் பிரதானமாகவும் தென்னாட்டு. குறிப்பாக தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களை சார்ந்தும் ஒரு அதிகார வர்க்க கும்பலைக் கொண்டுதான் ஆட்சி நடத்தியது. கூடவே டூன் பள்ளி சகபாடிகளையும் ராஜீவ் கும்பல் சேர்த்துக் கொண்டது.

ஒவ்வொரு முறை ஆளும் கட்சிகள் மாறும் போதெல்லாம் மத்தியிலும், மாநிலங்

## ஐ.ஏ.எஸ். பயிற்சியும் நடைமுறையும்

உத்திரப்பிரதேசம் முசூரி என்ற மலைநகரில் அமைந்துள்ளது லால்பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாகக் கழகம். காலனிய இந்தியாவின் ஐ.சி.எஸ். அதிகாரிகளைப் பயிற்றுவித்த இங்கிலாந்திலுள்ள ஹைலிபரியைப் போன்று இது கருதப்படுகிறது. நாட்டின் அதிஉயர் புத்திசாலிகள் என்று கணிக்கப்படும் சிலநூறு இளைஞர்கள் ஆண்டுதோறும் இங்கு அனுப்பப்படுகிறார்கள். வசதி மிக்கவர்களின் ஆடம்பரக் கல்லூரிகள் தவிர அரசு பதவித் தேர்வுகளுக்காகவே நடத்தப்படும் வழிகாட்டிகள், தனிப்பயிற்சிக் கல்லூரிகள் மூலம் அறிவைக் கரைத்துக் குடித்துவிட்டு மண்டைவீங்கிப் போனவர்கள் இவர்கள்.

இந்த நிர்வாகக் கழகத்தின் முக்கிய பயிற்சியே அவர்கள் தமது இன, மொழி, பண்பாடுகளை உதறிவிட்டு பழைய காலனிய அரசின் பாரம்பரியத்தைப் பழகிக் கொள்வதுதான். இரத்தமும், நிறமும் மட்டுமே இந்தியராகவும், சிந்தனை, பழக்க வழக்கங்களால் ஆங்கிலேயராகவும் பயிற்றுவிக்கிறார்கள். ''விருந்துக்குப் போனால், பசியை ஆற்றுவது நோக்கமாக இருக்கக் கூடாது; சடங்கு, நாகரிகம், பண்பாடுதான் முக்கியம்'' என்பது முதல் காலணி, சீருடை, அலுவலகத்திலும் பொது இடங்கிளலும் பழகும் முறை முதற்கொண்டு மக்களுக்கு அந்நியமான அனைத்தும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

பல்கலைக்கழகப் பட்டமேற்படிப்பின் ஏதாவது ஒருதுறையில் தேறிய இவர்கள் ''எல்லாம் தெரிந்த தன்னம்பிக்கையும், அதீத திறமையும் உடைய, நாட்டின் அன்றாடப் பிரச்சினைகள் முதற்கொண்டு சகல துறைகளையும் கையாளும் சகலகலாவல்ல அதிகாரியாக ஒரு ஆண்டுக்குள் பயிற்சி கொடுக்கிறார்கள். அரசுக்கும் சட்டத்துக்கும் மட்டுமே விசுவாசியாக இருக்கவேண்டும். நடுநிலை - நீதிவழுவாமல், அரசியல்வாதிகளுக்கு பணியாத தைரியம் - நேர்மையாளனாக இருக்கவேண்டும் என்று பாடம் சொல்லித் தரப்படுகிறது.

ஆனால் ஒவ்வொரு நிர்வாக அதிகாரியும், வெளியிலே கற்றுக் கொள்ளும் பாடம், பயிற்சிதான் நடைமுறையில் இருக்கிறது. நாட்டுச் சேவைக்காகவன்றி, பதவி - பிழைப்பு என்ற காரியவாத நோக்கில் வந்தவர்களாக இருப்பதால் முதலில் அரசியல்வாதிகளுடன் நெருக்கமான கூட்டை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். வரதட்சிணை உட்பட சமூகக் கொள்ளைக்கும், மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தவும் பதவியைப் பயன்படுத்துகிறார்கள். அலுவலகங்களிலோ, தான் ஆபத்தில் சிக்கிக் கொள்வதைத் தவிர்ப்பதற்காக முடிவுகள் எடுப்பதைத் தள்ளிப்போடுவது, பொறுப்பைத் தட்டிக் கழிப்பது, முன்னாள் முடிவுகளைக் காப்பி அடிப்பது, கோப்புகளில் இரட்டைப் பொருள்படும் குறிப்புகள் எழுதுவது என்று நழுவிக் கொள்கிறார்கள். ஆனால் அதிகார முறைகேடுகள், லஞ்ச ஊழல்களில் ஈடுபடவோ அஞ்சுவதில்லை.

## வெளியே...
### ராஜீவின் ஆட்கள்

பதவி உயர்வு பெற்றுப் போகும் சேஷன்; வெளியேற்றப்படும் ஐ.பி.இயக்குனர் நாராயணன்.





படிப்பகம்

www.padippakam.com



நிதிச் செயலாளர் பிமல் ஜலான்

களிலும் இப்படித் தமக்கு விசுவாசமான அதிகாரிகளைத் தேடி உயர்பதவிகளில் அமர்த்துகின்றனர். 1977ல் ஜனதாவும், 1980ல் மீண்டும் இந்திராவும் ஆட்சிக்கு வந்தபோது இதைவிடப் பெரும்மாற்றங்கள் செய்தனர். 1982ல் சஞ்சய்காந்தி சாவுக்குப் பிறகு ராஜீவ் வாரிசுப் பட்டம் கட்டிக் கொண்டதும் 90 அதிகாரிகளை மாற்றும்படி செய்தார்.

ராஜீவ் அரசு ஆட்டங்காணத் துவங்கியதும் அதிகாரிகளைப் பந்தாடுவதன் மூலம் அதை நிலைநிறுத்திக் கொள்ள முயன்றார். இலாகா செயலாளர்களாக உள்ள 62 பேரிடையே மட்டும் மூன்றாண்டுகளில் 102 முறை கலக்கிப் போட்டுப் பார்த்தார். ஒவ்வொரு துறையிலும் சராசரி 22.64 நாட்கள் தான் ஒரு செயலாளர் இருந்தார். அவர்களுக்குக் கீழே இருந்த அதிகாரிகளோ சராசரி 14.34 நாட்கள்தான் ஒரு நாற்காலியில் இருந்தனர்!

இப்படி அதிகாரிகளை மாற்றிப் போடுவதினால், வி.பி.சிங் செய்வதைப் போல அரண்மனைப் புரட்சி, ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் நாட்டின் நிர்வாக ஆட்சி முறையிலேயே ஏதாவது மாற்றம் ஏற்பட்டு விடுமா? ஏற்படாது. செக்கு மாட்டின் மீதேறி சிங்கப்பூர் பயணம் போன கதையாகத் தான் முடியும்.

நாடு முழுவதும் ஒரு கூம்பு வடிவில் கட்டியமைக்கப்பட்டுள்ள நிர்வாக - அரசு அமைப்பின் மீது ஏறி உட்கார்ந்திருக்கும் சூத்திரதாரிகளாக இருக்கும் ஐ.ஏ.எஸ். - இந்திய நிர்வாகத்துறை அதிகாரிகள் மொத்தம் 4800 பேர்தான். அவர்களிலும் 500 பேர் உத்திரப் பிரதேசத்து நிர்வாகப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டவர்கள். இன்னும் 500 பேர் உ.பி. மாநிலத்தில் பிறந்து, மற்ற மாநில - மத்திய நிர்வாகப் பிரிவுகளுக்குப் போனவர்கள்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போலவே சட்ட - ஒழுங்கு நிர்வாகத் துறைக்கு நேரடிப் பொறுப்பேற்கும் ஐ.பி.எஸ். இந்தியப் போலீசுத்துறை அதிகாரிகள் மொத்தம் 5000 பேர்கள். இவர்கள் தவிர வெளிநாட்டு விவகாரங்களைக் கவனிக்கும் ஐ.எஃப்.எஸ் - இந்திய அயலுறவுத்துறை அதிகாரிகள் 3000 பேர்கள்.

இவர்கள் அனைவரிலும் 186 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தாம் மத்திய அரசின் செயலாளர்கள், மற்றும் பிற உயர் பதவிகளில் இருந்து கொண்டு அரசு நிர்வாகத்தை நடத்துகிறார்கள்.

## அதிகாரிகளும் செக்கு மாடுகளும்

ஒவ்வொரு அமைச்சகத்துக்குள்ளும் சில இலாகாக்கள்; ஒவ்வொன்றும் ஒரு செயலாளர், இயக்குநர் அல்லது கமிஷனரின் பொறுப்பில் உள்ளன. இப்படி மத்திய அரசில் மட்டும் ஏறக்குறைய 100 இலாகாக்கள். ஒவ்வொரு இலாகாவுக்குக் கீழேயும் பல பிரிவுகள்; இணை, கூடுதல், துணைச் செயலாளர்கள், இயக்குனர்கள் அல்லது கமிஷனர்களின் பொறுப்பில் உள்ளன. அவர்களுக்குக் கீழே பல உட்பிரிவுகள் குட்டி அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பொறுப்பில் இயங்குகின்றன.

ஆண்டு, ஐந்தாண்டு திட்ட வரைவுகளைத் தயாரிப்பது, ஏற்கனவே உள்ள திட்டங்களை அமுலாக்குவது, வரவு செலவுகளைத் தயாரிப்பது, ''லைசென்சு - பர்மிட்டு - - கோட்டா'' வழங்குவது, ''கான்டிராக்ட் - டெண்டர்'' விடுவது, நியமனங்கள், மாற்றங்கள் செய்வது இப்படி 90 சதவிகிதம் வழமையான பணிகளையே இந்த இலாகாக்கள் நிறைவேற்றி வருகின்றன. இவர்களின் வேலைகள் அனைத்துக்கும் சட்டதிட்ட விதிகளும் மரபுகளும் ஏற்கனவே உள்ளன. பெரும்பாலும் முந்தைய அதிகாரிகள் செய்ததையே மாதிரியாகக் கொண்டு இயந்திர கதியில் அப்படியே செய்வதுதான் இவர்களுக்குப் பழக்கம்.

பல்வேறு உட்பிரிவுகளைச் சேர்ந்த குட்டி அதிகாரிகள்தான் முடிவுகள் எடுக்கிறார்கள்; மேற்பார்வையிடவும், கையொப்பமிடவும் தான் மேல் அதிகாரிகளுக்குப் போகிறது. மந்திரிகளோ ஏற்கனவே முடிவெடுக்கப்பட்ட கோப்புகளுக்கு இறுதி முத்திரை குத்துவது போல கண்ணை மூடிக் கொண்டு நீட்டிய இடங்களில் வரிசையாக கையொப்பமிடுவதோடு சரி. மிகவும் திறமையுள்ள மந்திரி என்று பெயரெடுத்தவர்கள் அந்தந்தக் கோப்புகளின் மீது அதிகாரிகளிடம் இருந்து விளக்கம் கேட்பவர்கள் - அவ்வளவுதான்!

லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் செய்ய வேண்டுமானாலும் ஏதாவது விவகாரத்துக்குள்ளான பிரச்சினை - புகார்கள் வந்தாலும் மட்டுமே மந்திரிகளும், உயர் அதிகாரிகளும் கவனம் செலுத்துவார்கள். இவற்றிலும்கூட எப்படிச் செய்யவேண்டும் என்று வெளியிலுள்ள அதிகாரத் தரகர்கள் சொல்லிக் கொடுக்கிறார்கள். எந்தத் தகுதியும் இல்லாத பரம்பரை, பொறுக்கி, கிரிமினல் அரசியல்வாதிகள் பல்வேறு துறைகளுக்கும் மந்திரிகளாகிறார்கள். பல்கலைக்கழக மேற்படிப்பும், ஐ.ஏ.எஸ். - ஓராண்டுப் பயிற்சியும் பெற்றுவிட்டு குறிப்பான துறைகள் பற்றி அறிவே இல்லாதவர்கள் தலைமை அதிகாரிகளாகிறார்கள்.

இந்த நிலைமியில் மந்திரிகளாகட்டும், தலைமை அதிகாரிகளாகட்டும் ஒவ்வொரு துறை - இலாகாவிலும் ஒரு சில மாதங்கள் - நாட்களே பொறுப்பில் இருக்கிறார்கள். அடுத்த மட்டத்திலும் இதே நிலைதான். எனவே ஒரு குறிப்பிட்ட துறையிலேயே நீண்டகாலம் கொட்டை போட்ட பழம் பெருச்சாளிகளான குட்டி அதிகாரிகள் அல்லது ஊழியர் ஓரிருவர் இருப்பார்கள். இவர்களைக் கேட்டுத்தான், இவர்களின் மரபுவழி - நடைமுறை அனுபவத்தின் அடிப்படையில்தான் எல்லா முடிவுகளுமே எடுக்கப்படுகின்றன. இவர்கள் ஓய்வு பெற்றுக் கிழமான பிறகும் அந்தந்த அலுவலகங்களுக்கே தினமு போய் வேலை நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுத்து வருமானம் தேடிக் கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கொஞ்சம் உயர்அதிகாரிகளாக இருந்தால், ஓய்வு பெற்ற பின் உள்நாட்டு, வெளிநாட்டு கம்பெனிகளின் அதிகாரத் தரகர்களாகி, அதே இலாகாக்கள் மூலம் அரசு வேலைகளைச் சாதித்துக் கொள்கிறார்கள்.

ஏதாவது புதிய சட்டதிட்டங்களோ, கொள்கை முடிவுகளோ எடுக்க வேண்டுமானால் தனிக்குழுக்கள் அமைக்கிறார்கள். அதிலேயும் பழைய அதிகாரிகளையே பெரும்பாலும் நியமிக்கிறார்கள். அங்கேயும் அந்த சட்டதிட்டங்கள் கொள்கைகளால் ஆதாயம் அடைபவர்களின் அதிகாரத்தரகர் வந்து தலையிட்டு தமக்குச் சாதகமான முடிவெடுக்கச் செய்கின்றனர்.

இரண்டு, அதற்கு மேற்பட்ட இலாகாக்கள், அமைச்சகங்களுக்குப் பொதுவான முடிவுகள் - நடவடிக்கைகள் என்றால் இன்னும் மோசமாக நடக்கின்றன. உதாரணமாக இறக்குமதி பற்றிய ஒரு விவகாரம் என்றால் நிதி, வர்த்தகம், அயலுறவுத்துறைகள் தவிர விஞ்ஞானம் தொழில்நுட்பம், தொழில், இராணுவம் போன்றவையும் சேர்ந்து தீர்மானிக்க வேண்டும். இவற்றின் தலைமை அதிகாரிகள் மற்றவர் மீது பொறுப்புகளைச் சுமத்தி நழுவிக் கொள்ளவே எப்போதும் முயலுகிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்காக வாரம் ஒருமுறை கூடும் அமைச்சரவை மற்றும் அதிகாரிகள் கூட்டம் நடப்பதுவோ 2 மணி நேரம்தான்! அதன் பெரும்பான்மையான நேரம் சிற்றுண்டி சாப்பிடப் போய்விடும். கடைசியாக, ''பரிசீலித்தோம், ஏற்றுக்கொள்கிறோம்'' என்று எல்லாக் கோப்புகளிலும் கையெழுத்துப் போட்டுவிட்டுக் கலைந்து விடுவார்கள். விவகாரம் ஆகிவிடும்போது ''எனக்குத் தெரியாது, என்னிடம் கூறவில்லை'' என்று கையும் விரித்து விடுவார்கள்.

அமைச்சரவைச் செயலகம் அல்லது பிரதமரின் அலுவலகம் மேலிருந்து அதிகாரத் தரகர்கள் அணுகி சாதகமான முடிவெடுக்கும்படி திணிப்பதற்கானவை. இப்படி ஏதும் வராதபோது பழைய வழக்கப்படி செக்கு மாடுகளைப் போல அதிகார வர்க்கம் இயங்கும்.

படிப்பகம்

www.padippakam.com



ராஜீவின் நம்பகமான விசுவாசி; போபர்ஸ் ரகசியங்களை அறிந்தவர்; பிரச்சார மூளை. கோபி அரோரா

நாட்டிலுள்ள பல்வேறு சாதி, மத, இன, பிராந்திய மக்களின் சமூகப் பின்னணி - அடிப்படையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் பரவலான முறையில் அங்கிருந்து உருவானவர்கள் இல்லை, இந்த அதிகாரிகள். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ் - ஆகிய மூன்று துறையினருமே மிகவும் குறுகிய ஒரு சில சாதிகளையே சேர்தவர்கள் தாம்! அதிலும் குறுகிய சில குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; அப்படிப்பட்ட குடும்பங்களுடன் திருமண உறவு கொண்டவர்கள்தாம் பெரும்பான்மையினர்! தங்கள் வாரிசுகளும் இதே போல உயர் அதிகாரிகளாக வேண்டும் என்பதற்காக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மிகவும் 'உயர்ந்த' கல்வி நிலையங்களில் படிக்க வைத்துத் தயாரிக்கப்பட்டவர்கள். விதிவிலக்கான முறையில்தான் இந்தக் குறுகிய பின்னணிக்கு வெளியிலிருந்து சிலர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

நேரு, பட்டேல், ராஜாஜி காலத்தில் நிர்வாகத் திறமை மிக்க அதிகாரிகள் இருந்தார்கள்; பின்னாளில் அரசியல்வாதிகளால் கெடுக்கப்பட்டு விட்டார்கள் என்று இப்போது கூறப்படுகிறது. உண்மை என்னவென்றால் அவர்கள் காலத்து அதிகார வர்க்கத்தினர் அனைவரும் ஆங்கிலேய ஏகாதிபத்தியக் காலனி அரசுக்காகப் பயிற்றுவிக்கப்பட்ட ஐ.சி.எஸ். - இந்திய சிவில் நிர்வாகத்துறையினர். உடல்தோற்றத்தாலும் இரத்தத்தாலும் இந்தியர்கள். சிந்தனையால் அந்நியர்கள். ஏகாதிபத்தியக் கைக்கூலிகள்.

இப்படிப்பட்டவர்களின் வாரிசுகள் தாம் பெரும்பான்மையினராக இப்போதைய அதிகாரிகள். அதே ஏகாதிபத்திய வாதிகள் வகுத்த சட்ட - நிர்வாக விதிமுறைகள், அதிகாரங்கள், மரபு - பழக்கவழக்கங்களைக் கொண்டு அதே காலனிய - சுரண்டல் அரசு எந்திரம்தான் இன்னமும் நீடிக்கிறது.

**அப்ரூவர் ஆனதினால் 16 லட்சம் ரூபாய் சம்பளத்துடன் வாஷிங்டனில் பதவி.**

நேரு, மாளவியா, பந்த், சித்தரஞ்சன், கித்வாய், ஆசாத், காட்கில் — இப்படிக் காங்கிரசுப் பழம்பெருச்சாளிகளின் வாரிசுகள் அரசியல் தலைவர்களாக பின்னாளில் மந்திரிகளாயினர். தலைமுறை தலைமுறையாக நிர்வாக - அரசியல் கட்டுமானமும் தொடர்கிறது.

ஏகாதிபத்திய நிர்வாகத் திறமை வெறும் காரியவாத - சுயநல - பிழைப்புவாதமாகச் சீரழிந்துவிட்டது. காங்கிரசின் காந்தியமும், ஜனநாயக - சோசலிசமும் வெறும் கவர்ச்சிவாத பொறுக்கி - கிரிமினல் அரசியலாக சீரழிந்துவிட்டது. இந்த மாற்றங்களுக்குப் பொருத்தமான முறையில் மக்களை அடக்கி ஒடுக்குவதிலும் சுரண்டுவதிலும் மிக மிக நெருக்கமான பிணைப்பை அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் ஏற்படுத்திக் கொண்டனர். குறிப்பாக ராஜீவ் ஆட்சிக் காலத்தில் இந்தப் போக்கு உச்சக்கட்டத்தை எட்டியது.

பல்வேறு லஞ்சஊழல், அதிகார முறைகேடுகள், அவதூறுப் பொய்ப் பிரச்சாரங்களில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கூட்டுச்சேர்ந்து கொண்டனர். பதவிக்காலம் முடிந்த பிறகும், நீட்டிப்பும், கவர்னர்கள், தூதுவர்கள், ஆலோசகர்கள் என்கிற புதுப் பதவிகளும் பெறுவதில் மிகவும் அக்கறையுடன் செயல்பட்டார்கள். பல அதிகாரிகள் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு காங்கிரசில் சேர்ந்து மந்திரிகளாகவும், கட்சிப் பதவிகளிலும் கூட சேர்ந்தனர்.

''கட்சி அரசியல் அதிகார வர்க்கத்துக்குள்ளும் நிர்வாகத்துக்குள்ளும் புகுந்து விட்டதால்தான் அவை சீர்கேடு அடைந்து விட்டன; தன்னிச்சையாகி விட்டால், அரசியல் குறுக்கீடு இல்லாவிட்டால் நேர்மையான, திறமையான நிர்வாக அமைப்பை உருவாக்கிவிட முடியும்'' என்று புதிய பிரதமர் வி.பி. சிங்கும் அவரது ஆதரவாளர்களும் பல பழைய அரசியல்வாதிகளும் கூறி வருகின்றனர். பத்திரிக்கைகள் இந்தப் பிரச்சாரத்தை நீண்டகாலமாகவே செய்து வருகின்றன.

ஆனால் அதிகார வர்க்கமும், அதிகார வர்க்கப் போக்கும் எந்த நாட்டிலும் ஜனநாயக - மக்கள் விரோதமான பலகேடுகளைக் கொண்டவைதாம்! மக்கள் சமுதாயத்திடமிருந்து அதிகார வர்க்கம் எவ்வளவுதூரம் தனிமைப்பட்டு, தனிவகை சாதியாக வளருகிறதோ அவ்வளவு தூரம் அது அகங்காரம், அதிகாரவெறி, சிகப்பு நாடாவுக்குள் சிக்கிக் கொள்கிறது. முதலாளிகள், மற்றும் கட்சி அரசியல்வாதிகளுடன் அதற்குள்ள நெருக்கத்தைப் பொருத்து லஞ்சஊழல், அதிகார முறைகேடுகளில் ஈடுபடுகிறது.

நாய்வாலை நிமிர்த்துவதும், இவ்விரண்டு போக்குகளில் இருந்து அதிகார வர்க்கத்தை விடுவிப்பதும் ஒன்றுதான். இப்படிப்பட்ட அதிகார வர்க்கத்துக்கு உள்ளேயே சில நபர்களை அகற்றிவிட்டு, வேறு சில நபர்களை நியமிப்பதன் மூலம் எந்தவித மாற்றத்தையும் கொண்டு வந்துவிட முடியாது.

● ஆர்.கே.

கூட்டுறவு நூற்பாலை:

## தொழிலாளர்களின் துயரநிலை!

தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, தருமபுரி அடுத்த ஊற்றங்கரையில் இயங்குகிறது. சுமார் 600 தொழிலாளர்கள் இங்கு பணிபுரிகின்றனர். ஆலை துவங்கி ஐந்தாண்டு காலமாகியும் பலர் ஆரம்பத்திலிருந்து தினக்கூலியாகப் பணிபுரிகின்றனர். கிராமக் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களை தனது பங்குதாரர்களாகக் கொண்டு இயங்கும் இவ்வாலை நிர்வாகம், தனியார் முதலாளிகளை விட கோரமாக தொழிலாளர்களைச் சுரண்டிக் கொழுக்கிறது.

இந்திரஜித் மாசிலாமணி என்ற கருங்காலி, நிர்வாகத்தின் ஆள்காட்டியாக வேலை செய்து ஈனத்தனமாக வயிறு வளர்க்கிறார். தொழிலாளர்களுக்கு சேரவேண்டிய சட்டப்படியான சலுகைகள், விடுப்புகள். கேன்டீன் வசதிக்காக போராடுபவர்களைக் கூட மிரட்டுவது இவரது வாடிக்கை.

எந்த ஒரு கோரிக்கை, போராட்டம் என்றாலும் அன்பு என்ற தொழிலாளி முன்னணியில் நின்று தொழிலாளர்களின் சார்பாக வாதாடுபவர். இவரை பல சந்தர்ப்பங்களில் வெளியேற்றக் காத்திருந்த நிர்வாகம் கருங்காலி இந்திரஜித்தை ஏவி அவர் நடவடிக்கைகளை மோப்பம் பிடித்தது.

போராட்டப் பாதையில் தொழிலாளர்களை திரட்ட அன்பு உடன் பல தொழிலாளர்கள் முன்முயற்சி எடுத்தனர். ஆலையின் சட்டங்களுக்கு விரோதமாக, தொழிலாளர்களிடம் பகைமையை வளர்க்கிறார் என்று காரணம் கூறி முன்னோடித் தொழிலாளியான அன்புவை வேலையில் இருந்து வெளியேற்றிவிட்டது. ஆறுமுகம் என்ற 'ஸ்பின்னிங்' பிரிவில் பணிபுரிந்த இன்னொரு தொழிலாளியையும் இவ்வாறு வேலையிலிருந்து வெளியேற்றிவிட்டது நிர்வாகம்.

இதற்கான, பொய் காரணங்களையும், புளுகுணித் தனங்களையும் ஜோடித்துக் கொடுப்பது கருங்காலி இந்திரஜித் மாசிலாமணியின் வேலை. ஆலையில் வேலையை ஒழுங்காக பார்க்காமல், சோம்பேறியாக சுற்றித் திரிந்து கமிஷன் அடித்து வெளியில் 'பைனான்ஸ்' நடத்தி கொழுத்து வருகிறார் இந்த மாசிலாமணி

வெளியேற்றப்பட்ட அன்பு என்ற தொழிலாளி கலப்புமணம் புரிந்தவர். முஸ்லீம் மதத்தை சேர்ந்த அவரது மனைவியும் குடும்பத்தாரும் பெரும்துன்பத்தில் உழலுகின்றனர். பலமுறை நிர்வாகத்திற்கும் அதிகார வர்க்கத்திற்கும் மனுக் கொடுத்தும் இன்னும் அக்குடும்பத்துக்கு எந்த நியாயமும் கிடைக்கவில்லை.

கரையான் புற்றெடுக்க கருநாகம் புகுந்தது போல, பல கிராம கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களின் பங்கு முதலீட்டால், ஓங்கி வளர்ந்திருக்கும் இந்நிறுவனத்தை அதிகாரிகளும் கருங்காலிகளும் உறிஞ்சி கொழுக்கின்றனர். தொழிலாளிகளோ வீதியில் கிடக்கின்றனர்

தகவல்: ஆசைதம்பி, ஊற்றங்கரை.

படிப்பகம்

www.padippakam.com




★ *தனிமாநிலம் அல்லது தனிநாடு வேண்டும் என்று (பிரிவினை) கேட்டுப் போராட்டம் நடத்தும் வடகிழக்கிந்திய மக்களின் போராட்டத்தைத் தனிநாடு (பிரிவினை) கோரும் போராட்டமாக சித்தரிக்காமல் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமாக சித்தரிப்பது ஏன்? உண்மையில் அவர்கள் தனிநாடு கோரிப் போராடினால் அதை ஆதரிக்க இயலுமா?*

*சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் எனில் அவர்கள் எந்த நாட்டுடன் இப்படிப்பட்ட உரிமையை (பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை) கோருகின்றனர்? தேசிய இன ஒடுக்கலையே பிரதானமாக செய்து கொண்டிருக்கும் இந்தியாவுடன் அப்படி சேர்ந்திருக்க இயலுமா? எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தியா இதை அனுமதிக்கும்?*

● வடகிழக்கிந்திய தேசிய இனங்கள் ஒரே தலைமை, திட்டத்தின் கீழ் போராடவில்லை. பல்வேறு தேசிய இன முதலாளிய, குட்டி முதலாளியக் குழுக்களின் கீழ் வெவ்வேறு திட்டங்களை வைத்து அவை போராடுகின்றன. தனிநாடு (பிரிவினை) கோரும் போராட்டமாக அவற்றில் பல இருப்பினும் சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து போகும் உரிமையையும் உள்ளடக்கியது என்பதால் அவ்வாறு கருதுகிறோம்.

தனியாகப் பிரிந்து போவதா, சுயநிர்ணய உரிமையை ஏற்று மற்ற இனங்களுடன் இணைந்து வாழ்வதா என்பதை ஒடுக்கப்படும் தேசிய இனமக்களின் பெரும்பான்மைதான் தீர்மானிக்க முடியும். இன ஒடுக்குமுறைக்கு எதிரான, நியாயமான, ஜனநாயக உரிமைக்கான போராட்டம் என்கிற வகையில் தனிநாடு கோரிப் போராடுபவர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஆதரிக்கவேண்டும்.

பாட்டாளி வர்க்கத் தலைமையிலான மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசுதான் சுயநிர்ணய உரிமையை ஏற்கும். இந்தக் காரணத்தையே அடிப்படையாக வைத்து இரண்டு எதிரெதிரான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒன்று, நேரடியான புதிய ஜனநாயகப் புரட்சிக்கு வரும்படி எல்லா ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களையும் அழைக்க வேண்டுமே தவிர அவர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை ஆதரிக்கக் கூடாது என்கிறவாதம். இப்படித்தான் ''முதலாளித்துவத்தின் கீழ் ஜனநாயகக் கோரிக்கை நிறைவேறாது என்பதற்காக சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை ஆதரிக்கக்கூடாது'' என்று ரோஸா லக்சம்பர்க் வாதாடினார். 'ஆட்சிமுறை எதுவாக இருப்பினும் ஒரு முதலாளித்துவ நாட்டில் மூலதன ஆதிக்கம்தான் நிலவும் என்ற மிகவும் சரியான முடிவிலிருந்து ஜனநாயகம், குடியுரிமைக்கான கோரிக்கைகளை முன் வைப்பது அவசியமில்லை' என்று வாதிடுவதைப் போன்றது என அதைச் சாடி நிராகரித்தார், லெனின்; போராடும் தேசிய இனங்களை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இன்னொன்று, மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசுதான் சுயநிர்ணய உரிமையை ஏற்கும்; அதனிடம்தான் இந்தக் கோரிக்கையை முன்வைத்து அடைய முடியும்; அதுவரை தேசிய இன ஒடுக்கலை பிரதானமாகக் கொண்டிருக்கும் இந்தியாவுடன் சேர்ந்து இருக்க இயலாது. எனவே தனிநாடு கோரிக்கையை அப்படியே ஆதரிக்க வேண்டும் அல்லது நாமே எடுத்து நடத்த வேண்டும் என்கிறவாதம். இது ரோஸா லக்சம்பர்க் கூறிய அதே காரணங்களைக் காட்டி அதற்கு நேரெதிரான முடிவுக்கு வருவதாகும்.

★ *லெனின் விவசாயிகளைக் குட்டி முதலாளி என்கிறாரே (லெனினிய போர்த் தந்திரம் பக்:11) நாம் விவசாயிகளை இணைப்பது ஏன்?*

● விவசாயிகள் சிறு உடமை - சிறு உற்பத்தியாளர்கள் என்கிற முறையில் குட்டி முதலாளிகள் என்கிறார் லெனின். ஒவ்வொரு நாட்டினதும் சமுதாயப் பொருளாதார, அரசியல் அமைப்பை ஆய்வு செய்து புரட்சியின் கட்டமும் தன்மையும், புரட்சியின் நண்பர்களும் எதிரிகளும் தீர்மானிக்கப்படுகிறார்கள். ருஷ்யாவில் ஜாரிச நிலப்பிரபுத்துவ அரசுக்கு எதிராக 1917ல் பிப்ரவரி ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளிவர்க்க, விவசாயிகளின் சர்வாதிகாரம் என்ற முழக்கத்தை வைத்து விவசாயிகளையும் இணைத்துக் கொண்டார், லெனின். ஆனால் 1917 அக்டோபர் சோசலிசப் புரட்சியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற முழக்கத்தின் கீழ் பாட்டாளிகள் - ஏழை விவசாயிகளின் கூட்டை அமைத்தபோது குட்டி முதலாளித்துவத் தன்மையுடைய விவசாயிகளைத் தனிமைப் படுத்தப்பட வேண்டிய சக்தியாகவே கருதினார்.

இன்றைய அரைக்காலனிய அரை நிலப்பிரபுத்துவ இந்தியாவில் தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களுக்கு எதிரான ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம். புரட்சியின் மையங்களாகத் திகழும் கிராமப்புறங்களில் வாழும் நமது நாட்டின் பெரும்பான்மை மக்களான விவசாயிகள் புரட்சியின் பிரதான சக்திகளாக உள்ளனர். புரட்சிக்குப் பிறகும் கூட நீண்டகாலத்துக்கு, சோசலிசப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்கும் முன் தேவை காரணமாக முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சியை அனுமதிக்க வேண்டியுள்ளது. எனவே 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்ற முழக்கத்தின் கீழ் விவசாயிகளைத் திரட்டுகிறோம். பிறகு ஒருவருக்கொருவர் உதவும் வேலைக்கான குழுக்கள், விவசாயக் கூட்டுறவுகள், கூட்டுப் பண்ணைகள் என்று படிப்படியாக சோசலிசத்தை நோக்கி விவசாயிகளை வளர்த்தெடுப்போம். இந்த அடிப்படையில்தான் புரட்சியில் அவர்களை இணைத்துக் கொள்கிறோம்.

## புரட்சி சாத்தியமா?

★ *இந்தியாவில் முதன்முறையாக உருவான கம்யூனிஸ்டுக் கட்சி ஏன் மக்கள் ஆதரவு பெறவில்லை? உலகிலேயே மிகப் பெரிய கம்யூனிஸ்டு நாடான ருஷ்யாவிலும் சீரழிவு இருக்கும்போது, சைனாவிலும் இதே நிலை தொடரும் போது, ம.க.இ.க. நீங்கள் மட்டும் எப்படிப் புரட்சி மாற்றம் செய்வோம் என்கிறீர்கள்? ருஷ்யாவில் முடியாததை நீங்கள் எப்படிச் சாதிப்பீர்கள்?*

— **விஜயேந்திரன், தஞ்சாவூர்.**

● இந்தியாவில் முதன்முறையாக உருவான கம்யூனிஸ்டுக் கட்சி ஆங்கிலேய ஏகாதிபத்தியக் காலனி ஆதிக்கத்துக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமையேற்கத் தவறியது. பாட்டாளி வர்க்கக் கட்சியையும், பாட்டாளிகள், விவசாயிகள் கூட்டை அடிப்படையாகக் கொண்ட ஐக்கிய முன்னணியையும், மக்கள் செஞ்சேனையையும் கட்டி ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புரட்சிப் பாதையை மேற்கொள்ளத் தவறியது. அதற்கு மாறாக காந்திய - காங்கிரசு துரோகக் கும்பலுக்கு வால் பிடித்துப் போனது. தொடர்ந்து மார்க்சிய - லெனினியத்துக்குப் புறம்பான தொழிற்சங்க, பொருளாதாரப் பிழைப்புவாதம் மற்றும் நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதையைக் கடைப்பிடித்து வருகிறார்கள். எனவே மக்கள் ஆதரவைப் பெறமுடியவில்லை.

ருஷ்யாவிலும், சீனாவிலும் சீரழிவுகள் ஏற்பட்டு முதலாளித்துவம் மீண்டும் நிலைநாட்டப்பட்டு விட்டது உண்மைதான். இப்படிப்பட்ட பின்னடைவுகளும், தோல்விகளும், நெளிவு சுளிவுகளும் தேக்கங்களும் இல்லாத நேர்கோட்டுப் பாதையில் வெற்றிகளை மட்டுமே ஈட்டி முன்னேறிவிடுவோம் என்று மார்க்சிய - லெனினியவாதிகள் கருதவில்லை. அதே போல முக்காலத்துக்கும், முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

பொருத்தமான மாறாத தீர்வுகளைக் கைவசம் தயார்நிலையில் வைத்திருப்பதாகவும் பீற்றிக் கொள்ளவில்லை. தோல்விகள், பின்னடைவுகளில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு இழப்புகளுக்கு ஈடுகட்டி தேக்கநிலையை உடைத்துக் கொண்டு முன்னேறுவோம் என்று திடமாக நம்புகிறோம்.

கம்யூனிஸ்டுகள் முதன்முறையாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை நிறுவிய 1871 பாரிஸ் கம்யூன் அடக்கி ஒடுக்கப்பட்டது. அதன்பிறகு ருஷ்யாவில் வெடித்த 1905 புரட்சி தோல்வி அடைந்தது. அவ்விரு புரட்சிகளின் அனுபவங்களிலிருந்து பாடங்கற்றுக் கொண்ட ருஷ்ய போல்ஷ்விக் கம்யூனிஸ்டுகள் 1917 பிப்ரவரி மற்றும் அக்டோபர் புரட்சிகளை வெற்றிகரமாக முடித்து உலகின் முதல் சோசலிச அரசை நிறுவினார்கள்.

முதலாளித்துவம் வளர்ச்சியுற்று, அதன் நெருக்கடிகளும் முரண்பாடுகளும் முற்றியிருந்த ஜெர்மனியிலும் அதைத் தொடர்ந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் புரட்சி முதலில் வெடிக்கும் என்று மார்க்கம் எங்கெல்சும் கணித்திருந்தனர். ஆனால் முதலாளித்துவம் ஏகாதிபத்தியக் கட்டத்துக்குள் நுழைந்தது. சர்வதேச நெருக்கடிகளும் முரண்பாடுகளும் முற்றியதன் விளைவாய் பின்தங்கிய ருஷ்யா, சீனா முதலிய நாடுகளில் புரட்சியில் வென்று பாட்டாளி வர்க்கக் கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றின. சோசலிச அரசு நிறுவப்பட்ட பிறகும் மீண்டும் முதலாளித்துவத்தை மீட்பதற்கான முயற்சிகளில் பழைய ஆளும் வர்க்கம் முயலும் என்று மார்க்சும் லெனினும் எச்சரித்தார்கள். அது எதார்த்தமாகி குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பல் ருஷ்யாவில் கட்சி மற்றும் அரசைக் கைப்பற்றி முதலாளித்துவத்தை மீட்டது. அதிலிருந்து பாடங்களைக் கற்ற மாசேதுங் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது, சோசலிச நிர்மாணம் ஆகியன பற்றிய தீர்வுகளை வகுத்தார்.

இப்படித் தோல்விகள், பின்னடைவுகள் இருப்பினும் ஆக்கபூர்வமான பாடங்களைக் கற்று புரட்சியில் முன்னேற முயலுகிறோம். எவ்வாறாயினும் மார்க்சிய - லெனினிய சித்தாந்தம் தவறானது என்று எங்கேயும் யாராலும் நிரூபிக்கப்படவில்லை. அதன் குறிப்பான பிரயோகங்களில் தான் தவறுகள் நேர்ந்துள்ளன. தவறுகளைத் திருத்திக் கொண்டு மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தை மேலும் செழுமைப்படுத்துவோம்.

## சாதி ஒழிய என்ன செய்தீர்?

★ *தேசிய இனங்களின் முரண்பாடுகளைத் தீர்க்க 'சுயநிர்ணய உரிமை' எனும்போது, சாதிய சமூக முரண்பாடுகளைத் தீர்க்க வல்ல நிலைப்பாடாக எது இருக்க முடியும்?*

— அ.ஜெயகாந்த் சிங், ஆவிச்சிக்குடி.

● நிலப்பிரபுத்துவ கட்டத்துக்கு பிந்திய சமுதாய அமைப்பில் வெவ்வேறு தேசிய இனங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளைத் தீர்த்து சேர்ந்தோ, பிரிந்தோ சமாதான சகவாழ்வு காண முன்வைக்கப்படும் தீர்வு 'சுயநிர்ணய உரிமை'.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்திற்கேயுரிய சாதிய சமூக முரண்பாடுகளை, ஒரு புதிய ஜனநாயகப் புரட்சி நடத்தி சாதிய சமூக உறவுகளை அரசியல், பொருளாதார ரீதியில் தகர்ப்பதன் மூலம் தான் தீர்க்க முடியும். அதன் பிறகும் நீடிக்கும் மிச்சசொச்சங்களை சமூக, கலாச்சாரப் புரட்சியைத் தொடர்வதன் மூலம் அழித்தொழித்துவிட முடியும். இப்படி ஒரு புரட்சி நடந்துவிடாமல் தடுப்பதற்கு, புரட்சியை ஒடுக்கும் மிக முக்கியமான வன்முறை எந்திரமான அரசு எந்திரத்தில் ஒடுக்கப்பட்ட சாதிகளின் உழைக்கும் மக்களையும் பங்கேற்க வைப்பதுதான் வகுப்புரிமை - இட ஒதுக்கீடு. இதை மண்டல்கமிஷன் பகிரங்கமாகக் கூறுகிறது.

★ *'சாதிய சமூக முரண்பாட்டின்' கூறிய முனையே புரட்சிகர இயக்கங்களின் பலவீனத்திற்கும், பின்னடைவிற்கும் அடிப்படை என்ற நிலைப்பாடு குறித்து தங்களின் கருத்து என்ன?*

— அ.ஜெயகாந்த்சிங், ஆவிச்சிக்குடி.

● அந்த நிலைப்பாடு ஏற்கக்கூடியதல்ல. சமுதாயப் பொருளாதார, அரசியல் அமைப்பு பற்றிய தெளிவான ஆய்வு, அரசியல் - இராணுவ யுத்த தந்திரங்கள், போர்த்தந்திரங்கள் பற்றிய கோட்பாடு, போல்ஷ்விக் அமைப்பு முறைகள் இவற்றுடன் தீர்க்கமான பொதுத்திசை வழி, பொதுவேலைத் திட்டம் ஆகிய மார்க்சிய - லெனினிய அடிப்படை புரட்சிகர இயக்கத்தில் உள்ள பல அமைப்புகளிடம் கிடையாது.

இதன் காரணமாக ஏற்படும் 'இடது' அல்லது 'வலது' சந்தர்ப்பவாத சறுக்கல்கள்தான் அவற்றின் பலவீனத்திற்கும் பின்னடைவிற்கும் அடிப்படை. மேற்கண்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதில் கடந்தகாலத்தில் 'இடது' சந்தர்ப்பவாத சேற்றிலே மூழ்கிக் கிடந்தவர்கள் அத்தவறுகளைத் திருத்துவதாகக் கூறிக் கொண்டு போலிக் கம்யூனிஸ்டுகளின் வலது சந்தர்ப்பவாத சகதிக்குத் தாவுகிறார்கள். கூடவே இனவாத, சாதிய இயக்கங்களின் கருத்துக்களையும் சேர்த்துக் கொண்டு புரட்சிகர இயக்கத்துக்கு எதிராக இந்த நிலைப்பாட்டைப் பரப்புகிறார்கள்.

★ *தற்போதும் 'சாதியப் பொருளாதாரமே' சமூகத்தை ஆட்கொண்டிருக்கும் போது நடைமுறை ரீதியில் அல்லாத, செயல்பூர்வமற்ற, வெறுமனே வாய்வழிப் பிரச்சாரத்தின் மூலம் மட்டுமே வர்க்க ரீதியில் உழைக்கும் மக்களை ஒன்றுதிரட்ட இயலுமா?*

— அ.ஜெயகாந்த்சிங், ஆவிச்சிக்குடி.

● ''தற்போதும்'' 'சாதியப் பொருளாதார மே' சமூகத்தை ஆட்கொண்டிருக்கிறது'' என்கிற முடிவு சரியானதல்ல. கிராமமும் நகரமும் இணைந்த, விவசாயமும் கைத்தொழிலும் இணைந்த கிராமிய சமுதாயம்; சாதிய ரீதியில் கறாரான வேலைப் பிரிவினை அடிப்படையில் சுயதேவைக்கான, முற்றிலும் சிறுவீத உற்பத்தியும், சாதிய ரீதியிலான பங்கீடு என்கிற பொருளாதாரம்; இவற்றுக்கு அடிப்படையான ஆசிய சொத்துடமை வடிவம் — ஆகியவைதான் சாதியப் பொருளாதார அமைப்பு. அதுவா இப்போது இருக்கிறது? ஆங்கிலேயக் காலனியவாதிகளே அதைத் தகர்த்து அரை நிலப்பிரபுத்துவ சமூக - பொருளாதார அமைப்பை உருவாக்கிவிட்டார்கள். இந்த அரைநிலப் பிரபுத்துவ உறவுகளைத் தகர்த்துவிடும் புதிய ஜனநாயகப் புரட்சிக்கு வர்க்க ரீதியில் உழைக்கும் மக்களைத் திரட்டுவதற்கான பல்வேறு வழிகளில் ஒன்றாக பிரச்சாரத்தையும் கருதுகிறோம்.

இந்தப் பணி நடைமுறை ரீதியில் அல்லாத, செயல்பூர்வமற்ற வெறுமனே வாய்வழிப் பிரச்சாரம் என்பது கொச்சைப்படுத்துவதாகும். தொழிற்சங்கப் பொருளாதார வாதத்திலும், பிழைப்புவாதத்திலும் மூழ்கியிருப்பவர்கள் அரசியல் புரட்சிப் பிரச்சாரத்தில் ஈடுபடுவதைப் பார்த்து நடைமுறை ரீதியில் இல்லை, செயல் பூர்வமற்றது என்று கேலி செய்வதைப் போன்றதுதான்! சரி! 'மண்ணுக்கேற்ற மார்க்சியம்' பேசுபவர்கள்தான் உழைக்கும் மக்களை ஒன்று திரட்டுவதற்கு நடைமுறை ரீதியிலான, செயல்பூர்வமான வழி என்ன சொல்கிறார்கள்?!

★ *புதிய ஜனநாயகப் பத்திரிக்கை வாயிலாக புரட்சியை உருவாக்க நினைக்கும் நீங்கள், இதுவரை இந்த நாட்டில் உள்ள சாதிப் பட்டியல்களில் எத்தனை வகையான சாதிகளை ஒழித்துக்கட்டி, இனிமேல் இப்படிப்பட்ட சாதி இந்த நாட்டில் இருக்காது என்று கூறும் அளவுக்கு புரட்சி ஏற்படுத்தி இருக்கிறீர்கள் அல்லது சாதியற்ற சமுதாயத்தை எப்போது காணப்போகிறீர்கள். அதற்கு உங்களது புரட்சிகரமான செயல்பாடுகள் எவை என்பதை தெளிவாக அறிவிக்க வேண்டுகிறேன்.*

● தோழர் மிகவும் அவசரப்படுகிறார். சாதிகளை ஒழிக்கவேண்டும் என்கிற நியாயமான ஆவேசத்தின் காரணமாகத்தான் என்று புரிகிறது. பத்திரிக்கை வாயிலாக மட்டும் புரட்சியை உருவாக்கமுடியும்; சாதியத்தை ஒழித்துவிட முடியும் என்று நாம் நினைக்கவில்லை. ஆனால் அப்பணிக்குப் பத்திரிக்கை மிகவும் உதவிகரமாக அமையும் என்று நம்புகிறோம்.

புரட்சிக்கு இப்போதே எப்படித் தேதி குறிக்கமுடியாதோ அப்படியே சாதி ஒழிப்புக்கும் சமயம் குறிக்க முடியாது. ஆனால் ஜனநாயகப் புரட்சியின் மூலம் அதைச் சாதித்துவிட முடியும் என்று நிச்சயமாக நம்புகிறோம். புரட்சிக்குத் தலைமையேற்கும் கட்சி மற்றும் பிற மக்கள்திரள் அமைப்புகளை சாதிகள் பாராட்டாத பாட்டாளிவர்க்க உறவுகளுடன் கட்டியமைப்பது, கம்யூன் - கூட்டு வாழ்க்கை, கலப்புத் திருமணம் போன்ற நடைமுறைகளைக் கையாள்வது, சமுதாயத்தில் சாதியத்தை எதிர்த்துப் போராடுவது ஆகியவற்றின் மூலம் அதை உத்திரவாதப்படுத்த முடியும் என்று கருதுகிறோம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

படிப்பகம்

www.padippakam.com






புத்தாண்டு, புதிய பத்தாண்டு பிறந்த நள்ளிரவில் கடும்பனி குளிருக்குப் போர்த்திக் கொள்ள கோணிப்பை கூட இல்லாமல் வடநாட்டில் பலர் விரைத்துப் போய் மாண்டனர். அந்த நள்ளிரவைக் கொண்டாட இந்த நாட்டு மேட்டுக் குடியினருக்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்வதில் ஐந்து நட்சத்திர விடுதிகள் கடும் போட்டியிட்டன. இறக்குமதியான மேலை நாட்டு மதுபுட்டிகள் உடைந்து 'சாராய' ஆறு ஓடியது. மங்கிய ஒளியில் பாப், டிஸ்கோ, ராக் அண்ட் ரோல் போன்ற மேலை நாட்டு இசை நாட்டியக் கூச்சலோடு மூர்ஜா, கஜல் போன்ற உள்ளூர் கும்மாளங்களையும் கலந்து வெறியூட்டின.

இதற்காக கிளுகிளுப்பூட்டும் நட்சத்திரங்கள் பலரையும் இறக்குமதி செய்திருந்தன. ஒரு ஆளுக்கு 2990 ரூபாய் கட்டணம் வசூலித்த டில்லி மௌரியா ஷெராடன் ஓட்டல் மாஸ்கோவில் இருந்து ''ஈரோ நட்சத்திரங்கள்'' என்ற குழுவை வரவழைத்து ஆபாச நடனம் ஆடவிட்டது. ''பாலிஹை'' விடுதிக்கு டட்லி ராக் கும்பலும், தாஜ் ஓட்டலுக்கு ''குக் சகோதரி''களும் இங்கிலாந்தில் இருந்து இறக்குமதியானார்கள். மெரிடியன் ஓட்டலில் நடனமாட வந்த வெண்டல் ஜான்சன் தம்பதியினருக்காக எண்கோண மேடை அமைத்தார்கள். பம்பாய் தாஜ் ஓட்டலுக்கு ஜூடி - டிதேசி இணை இறக்குமதியானது.

# இதுதான் இன்றைய இந்தியா



இவ்விரு கும்பல்களும் 'முக்கல் - முனகல் நடன' நிகழ்ச்சிக்குப் பிரபலமானவர்கள்.

சென்னை தாஜ் கோரமண்டலில் 'ரெயில் வண்டி விருந்து'ம், சோழா ஷெராடனில் 'அராபிய இரவுகள் விருந்து'ம், கன்னிமாராவில் 'கிராமிய விருந்து'ம், மெரிடியனில் 'மொகலாய விருந்து'ம் செய்திருந்தார்கள். இந்த வகைப் பெயருக்கேற்ப அரங்க - ஆடை - இசை - நடன ஏற்பாடுகள் இருந்தன. இப்படிப் பல உள்நாட்டு வெளிநாட்டு ஆபாசக்கூத்து - கும்மாளத்துடன் மேட்டுக் குடியினரின் புத்தாண்டு, புதிய பத்தாண்டு பிறந்தது. இந்தக் களிவெறியாட்டங்களுக்கு எதிராக டில்லி நிஷாந்த் நாட்டிய மாஞ்ச், கொத்தடிமைகள் விடுதலை முன்னணி மற்றும் பிற சமூக அமைப்புகள் சேர்ந்து ஐந்து நட்சத்திர விடுதிகளின் முன்பு கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தின.

இதோ, உடல் நடுங்கும் குளிரில் தொழிலுக்குச் செல்லும் கட்டிட தொழிலாளர்கள் இவர்கள். தலைநகர் டில்லி கன்னாட் பகுதியில், உழைப்பாளி பெண்கள் தங்கள் கைக் குழந்தைகளை அணைத்துக் கொண்டு வேலைக்குச் செல்கிறார்கள். ஆண்டுதோறும் டிசம்பர் - ஜனவரி மாதங்களில் வடமாநிலங்களைத் தாக்கும் கடுங்குளிரில் வீடற்ற பலநூறு கூலி உழைப்பாளிகள் விறைத்துச் சாகிறார்கள். குழந்தைகளைப் பாதுகாக்கக் கூட அவர்களிடம் போதிய கம்பளி ஆடைகள் இல்லை. இந்த ஆண்டு, அரசுக் கணக்குப்படி ஜனவரி 2ம் தேதி வரை 109 பேர் குளிரால் இறந்தனர்.

நடைபாதைவாசிகள், வீடற்ற வடமாநில கூலி உழைப்பாளிகளுக்கு புத்தாண்டு, படுகொலைகளோடுதான் பிறக்கிறது. குளிர்காலத்தில்கூட அவர்களுக்குத் தற்காலிக தங்கும் இடங்களையோ, அவர்கள் வாங்கக்கூடிய விலையில் கம்பளி ஆடைகளையோ வழங்கவேண்டும் என்ற சொரணைகூட இல்லாமல், படுகொலைகளைக் குறைத்துக் கணக்கு காண்பிக்கிறது அரசு.

உணவு, உடை, இருப்பிடம் இன்றி பரிதவிக்கும் நாட்டு மக்களுக்கு ஆண்டுதோறும் புத்தாண்டு வாழ்த்துக்களை வழங்கிவிட்டு, சுகபோக கூத்தடிக்கும் அரசியல்வாதிகளையும் களிவெறியாட்ட வக்கிர கும்பலையும் நாம் இன்னும் எத்தனை புத்தாண்டுகளுக்குத்தான் சகித்துக் கொண்டிருப்பது?

படிப்பகம்